மலர் (Volume) 9 - இதழ் (Issue) 6

ஜூன் 2016

₹10/-

# தமிழ்நாடு நுகர்வோர் கவசம்

## Tamilnadu Nugarvor Kavasam

வெளியிடுவோர்: தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம். உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தமிழ்நாடு அரசு



# கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளி செல்லும் குழந்தைகளின் கவனத்திற்கு..

# ஆசிரியர் குழு

**பதிப்பாசிரியர்**

திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப.
முதன்மை செயலர்/ஆணையர்

**மேலாண்மை இதழாசிரியர்**

திருமதி. பெ. ரமண சரஸ்வதி, பி.டெக்
இணை ஆணையர்

**உறுப்பினர்கள்**

திரு. இரா. விஜயகுமார்
துணை ஆணையாளர்-II (பொ)

திருமதி. நிர்மலா தேசிகன்
திரு. எம்.ஆர். கிருஷ்ணன்
திரு. ஜி. சந்தானராஜன்

**இதழாசிரியர்**

திரு. இர. ரமேஷ்
துணை ஆணையர் - 1(பொ)

**தொகுப்பு**
**கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆப் இந்தியா**
3/242, ராஜேந்திரா கார்டன்,
வெட்டுவாங்கேணி, சென்னை-115.

**வடிவமைப்பு**

வெப் மோட்சா,
ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028.

**அச்சிட்டோர்**

மல்டிகிராப்ட்
9 அப்பாவு கிராமணி 2வது தெரு,
மந்தைவெளி, சென்னை - 600 028.

Published by S.Gopalakrishnan, I.A.S., Principal Secretary / Commissioner of Civil Supplies and Consumer Protection, Office of the Commissioner of Civil Supplies and Consumer Protection, 4th floor, Ezhilagam, Chepauk, Chennai – 600 005

Printed by Sathiyamoorthi,
Multicraft, No.9, Appavoo Gramani,
2nd Street, Mandavali,
Chennai – 600 028.

Editior: : R. Ramesh,
Deputy Commissioner I (i/c)

**அன்பார்ந்த நுகர்வோரே!**

ஒன்றல்ல... இரண்டல்ல... கிட்டத்தட்ட 45 நாட்களுக்கும் மேலாக கோடை விடுமுறையை குதூகலமாக கழித்து விட்டு ஜூன் மாதம் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல உள்ளனர். விடுமுறைக்கு பின்னர் புது உற்சாகத்துடன் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளின் தேவைகளான யூனிபார்ம்ஸ், பேக், புத்தகங்கள் ஆகிய அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற பெற்றோர்களும் தயாராகி வரும் நேரம் இது. இந்த நேரத்தில் பள்ளி குழந்தைகளைப் பற்றியும் அவர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றிய சிறப்புக் கட்டுரை இடம் பெற்றுள்ளது. அதனைப் படித்து பயன்பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்றைய நவீன காலக்கட்டத்தில் சுற்றுச்சூழல் என்பது அதிக அளவில் மாசுப்பட்டு வருகின்றது. அதனை பாதுகாக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

மேலும் வழக்கம் போலவே வாசகர்களாகிய உங்களுக்கு தேவையான பல விழிப்புணர்வு கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. அதனைப் படித்து பயன்பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நுகர்வோர் நலன் பகுதியில் உடல்நலத்திற்கான பல தகவல்களை உள்ளடக்கிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்விதழில் வாசகர்களாகிய உங்களுக்கென தனியே ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது. உங்கள் பகுதிச் செய்திகளை எழுதி அனுப்பி, நுகர்வோர் கவசத்தில் பல நுகர்வோர் விவரங்கள் வரும்படி செய்யவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சூ. கோபாலகிருஷ்ணன்,
பதிப்பாசிரியர்

## பொருளடக்கம்

**சிறப்புக் கட்டுரை**
கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளி செல்லும் குழந்தைகளின் கவனத்திற்கு. 4
**நுகர்வோர் செய்திகள்**
2017 முதல் அனைத்து செல்போன்களுக்கும் "பேனிக் பட்டன்" கட்டாயம் . . 6
கேடு விளைவிப்பது உறுதியானால் மைதா மாவை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்; உணவு துறை ஆணையருக்கு, ஐகோர்ட்டு உத்தரவு . 7
மின் உற்பத்திக்காக நிலக்கரி எரிக்கப்படுவதால் சீனா, இந்தியாவில் மழை குறையும்: ஆய்வில் எச்சரிக்கை. . . . . . . . . . . 8
வீட்டில் தனியாக இருக்கும் பெண்களுக்கு போலீசார் கூறும் 12 அறிவுரைகள் 9
மாநில நுகர்வோர் சேவை மையத்தினால் தீர்த்து வைக்கப்பட்ட புகார்கள் . . 10
நகரமயமாதல் செய்த கொலைகள்!...ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்! . . . . . . . . 12
இந்தியாவின் தேசிய அவசர அழைப்பு எண் 112 : மத்திய அரசு முடிவு . . 13
தவறான விளம்பரங்கள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . 13
மருந்துகள் விலைக் குறைப்பு . . . . . . . . . . . . . . . . . . . . 14
அழைப்புத்தடை. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14
எங்களைக் கேளுங்கள்- சொத்துப் பத்திரங்கள் தொலைந்துவிட்டால் என்ன தீர்வு? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 15
முறைகேடுகளை தடுக்க ரேஷன் கடைகளில் இணையவழி கையடக்க கம்ப்யூட்டர் அறிமுகம் . . . . . . . . . . . . . . . . . . . . . 16
நீங்கள் அருந்தும் பால் தூய்மையானதா....ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்! . . . . . 21
நுகர்வோர்களுக்கு ஓர் நற்செய்தி நுகர்வோர் குறைதீர் தினம். . . . . . . . . 23
**நுகர்வோர் நலன்**
தண்ணீரை சேமிக்க சில வீட்டுக் குறிப்புகள் . . . . . . . . . . . . . . . 23
நுகர்வோர்களுக்கு ஓர் நற்செய்தி நுகர்வோர் குறைதீர் தினம். . . . . . . . . 23
வாசகர்களுக்கான சிறப்பு பகுதி . . . . . . . . . . . . . . . . . . . 24
மாநில நுகர்வோர் சேவை மையம் பற்றி சில தகவல்கள் . . . . . . . . . 24
அத்தி பழமும் அதன் பயன்களும் . . . . . . . . . . . . . . . . . . . 26
எலுமிச்சையின் அற்புத மருத்துவக் குணங்கள்!. . . . . . . . . . . . . . 26
நோய் எதிர்ப்பு சக்தி தரும் தக்காளி. . . . . . . . . . . . . . . . . . . 27
மருத்துவக் குணம் நிறைந்த பேரிக்காய் . . . . . . . . . . . . . . . . . 28
**நுகர்வோர் தீர்ப்புகள்**
வங்கிச் சேவையில் குறைபாடு - இழப்பீடு தர கோவை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு. . . . . . . . . . . . . . . . 30
கல்வி ஆலோசனை மைய சேவை குறைபாடு: மும்பை மாணவருக்கு ரூ.1 லட்சம் நஷ்டஈடு . . . . . . . . . . . . . . 30
சாப்ட்வேர் தயாரிப்பில் சேவைக் குறைபாடு இழப்பீட்டுடன் ரூ.2.70 லட்சம் வழங்க உத்தரவு!!! . . . . . . . . . . . . . . . . . 31
**நுகர்வோர் உலகம்**
வாசகர் கடிதங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 32
வார்த்தை விளையாட்டு. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 33

# கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளி செல்லும் குழந்தைகளின் கவனத்திற்கு..

வாயைக்கட்டி, வயித்தை கட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டினு பணத்தை வாங்கி நீண்ட வரிசையில் கால்கடுக்க நின்று படிக்க பணம் கட்டி முடிச்சாச்சு. இனி பிள்ளையோ, பொண்ணோ படிச்சு நல்ல மார்க் வாங்கணும். அவ்வளவுதான்' என்று பெற்றோர் நிம்மதி பெருமுச்சு விட்டுக் கொண்டிருப்பர். இத்தோடு முடிந்து விடவில்லை பெற்றோர்களாகிய உங்கள் பொறுப்பு. இனிமேல் தான் அதிகரிக்கவே போகிறது.

ஒன்றல்ல... இரண்டல்ல... கிட்டத்தட்ட 45 நாட்களுக்கும் மேலாக கோடை விடுமுறையை குதூகலமாக கழித்து விட்டு மாணவர்கள் பள்ளிக்கு செல்ல உள்ளனர்.

விளையாட்டு, சுற்றுலா, பார்க், சினிமா என்று பெற்றோருடன் உற்சாகமாக கழித்த இந்த நாட்கள் மீண்டும் கிடைக்க 10 மாதங்கள் காத்திருக்க வேண்டும். அந்த உற்சாகத்தில் இருந்து மீண்டு படிப்பு... படிப்பு... படிப்பு இதை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு மாணவர்கள் புத்தகப்பையுடன் பள்ளிக்கூட வாசலை மிதிக்க உள்ளனர்.

பள்ளியில் சேர்த்து விடுவதோடு அல்லாமல் பாதுகாப்பை பற்றியும் பெற்றோர்கள் சிந்திக்க வேண்டிய நேரமிது. அவற்றில் சில முக்கிய பாதுகாப்பு அம்சங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**வாகன போக்குவரத்து:**

முதலில் மாணவர்களுக்கு அவசியமானது பள்ளிக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதி. அரசு உதவி பெறும் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகளில் பெரும்பாலானவை பஸ்கள், வேன்கள் வைத்திருக்கின்றன. இதற்கென்று கட்டணம் வசூலித்து மாணவர்களை ஏற்றி, இறக்கி விடுகின்றனர். இதன் மூலம் சற்று தொலைவில் உள்ள பள்ளியில் பிள்ளைகளை சேர்த்த பெற்றோருக்கு இந்த வசதி பெரும் உதவியாக இருக்கும். ஆனால், இதில் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது.

1. பஸ்சில் அல்லது வேனில் அவசர வழி இருக்கிறதா?
2. டிரைவர் வாகனத்தை வேகமாக இயக்குகிறாரா?
3. வாகனத்தில் உதவியாளர் பிள்ளைகளை ஏற்றி, இறக்க உதவுகிறாரா?
4. உங்கள் வசம் பிள்ளையை ஒப்படைத்து விட்டு செல்கிறாரா?
5. டிரைவர் போதை பழக்கத்திற்கு அடிமையானவரா?

என்பது உட்பட்ட விஷயங்களை முக்கியமாக கவனித்துக் கொள்ள வேண்டும்.



கூடுமானவரை டிரைவர், உதவியாளர்களின் செல்போன்கள், முகவரிகளை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். வெளியில் வேன், கார், ஆட்டோக்களை அமர்த்தும் பெற்றோர்களும் மேற்கண்ட விஷயங்களை கண்டிப்பாக கவனிக்க வேண்டும். பொதிமூட்டைகளை போல மாணவர்களை வாகனங்களில் திணித்து அள்ளி செல்கின்றனரா? அல்லது குறிப்பிட்ட அளவு மட்டுமே மாணவர்களை அழைத்து செல்கின்றனரா என கவனிக்க வேண்டும்.

ஆட்டோக்களில் அனுப்பும் போது டிரைவர்கள் பக்கத்தில் மாணவ, மாணவிகளை அமர வைக்க அனுமதிக்க கூடாது. முக்கியமாக பெண் குழந்தைகளை அனுமதிக்கவே கூடாது. குறைந்த பட்சம் டிரைவர்கள் 30-40 கிமீ வேகத்தில் செல்ல பெற்றோர், பள்ளி நிர்வாகத்தினர் டிரைவர்களுக்கு அறிவுறுத்தலாம்.

முக்கியமாக, அழைத்து வர முடியாத தகவலை டிரைவர்கள் கண்டிப்பாக பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும். விடுமுறையில் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்ததோடு வேலை முடிந்தது என போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அமைதியாக இருந்து விடக்கூடாது. தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

போக்குவரத்து போலீசாரும் பள்ளி வாகனங்களில் அதிக மாணவர்களை ஏற்றி செல்கின்றனரா என பார்வையிட வேண்டும். அதிகளவு ஏற்றி சென்றால் உடனே அபராதம் விதிக்க வேண்டும். இந்த விஷயத்தில் பெற்றோரின் பங்கு முக்கியமானது. மேலும், பள்ளியில் உள்ள அடிப்படை வசதிகள், வகுப்பறையில் காற்றோட்டம், கழிப்பறை வசதிகள் திருப்திகரமாக உள்ளதா என மாணவர்களிடம் பெற்றோர் கேட்க வேண்டும். கூடுமானவரை ஒவ்வொரு நாளும் பள்ளியில் நடந்த அன்றாட நிகழ்வுகளை மாணவர்களிடம் பெற்றோர் பகிர்ந்து கொள்வது மிகமிக முக்கியம்.

**மாவட்ட ஆட்சியரின் நேரடி கட்டணமில்லா தொலைபேசி எண், 1077 என்ற எண்ணையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக தொலைபேசி எண், 04342–232234** ஆகிய எண்களை தெளிவாக ஒட்டி வைக்க வேண்டும்.

மக்கள் கூடும் இடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மருத்துவமனைகள், பள்ளிகள், தாலுகா அலுவலகங்கள், சார்நிலை அலுவலகம் ஆகிய இடங்களில் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்னைகள் மற்றும் குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், பாலியல் வன்கொடுமை ஆகியவற்றில் ஈடுபடும் நபர்களுக்கு தரப்படும் தண்டனையை, விவரத்துடன், விழிப்புணர்வு பேனர்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

1. 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி அடிப்படை உரிமை என்பதை சட்டம் ஏற்று கொண்டுள்ளது. அவர்களுக்கு கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும்
2. தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் பள்ளி அருகில் உள்ள சமூக, பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஒதுக்கிட வேண்டும் அவர்களுக்கான கட்டணத்தை அரசு செலுத்தும்
3. குழந்தைகளை பள்ளியை விட்டு அனுப்புவதோ எட்டாம் வகுப்பு வரை ஒரே வகுப்பில் தக்க வைப்பதோ தடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல் எளிமையாக்கப்பட்டுள்ளது.
4. இன்றுள்ள தேர்வு முறைக்கு மாற்றாக குழந்தைகளின் அறிவையும், அறிவை பயன்படுத்துவதையும், மதிப்பீடு செய்யும் முழுமையான தொடர் மதிப்பீடு முறை வலியுறுத்தப்படுகிறது
5. பள்ளி நிர்வாகம் அதிகாரிகள் கை யிலிருந்து எடுக்கப்பட்டு சமூதாயத்தின் பொறுப்புகளுக்கு மாற்றப்படுகிறது. மாணவர்களின் பெற்றோர்களிடம் கொடுக்கப்படுகிறது

**எங்கு புகார் அளிப்பது:**

தன் கடமையில் இருந்து மீறுவது,மன உளைச்சலை ஏற்படுத்துவது, அத்துமீறுவது என ஆசிரியர் செயல்பட்டால் 17(ஆ) சட்டப்படி ஆசிரியரை சஸ்பெண்ட் அல்லது பணிநீக்கம் செய்யலாம். சட்டத்தில் இவ்வளவு இடம் இருந்தாலும் குழந்தைகளைக் கண்காணிக்கவும், பாதுகாக்கவும் சமூக ஆர்வலர்கள் தேவை. இல்லையென்றால் சட்டங்கள் வெறும் பேப்பர்களிலேயே இருக்கும்.

- தவறுகளை மாவட்ட கல்வி அதிகாரி, கூடுதல் கல்வி அலுவலர், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் போன்றவர்களிடம் சொல்லலாம்.
- மெட்ரிக் பள்ளி என்றால் மாவட்ட மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், மாவட்ட மெட்ரிக் பள்ளி உதவி ஆய்வாளரிடம் புகார்கள் தெரிவிக்கலாம்.
- அதிகாரிகள் எண்களை பள்ளியில் எழுதிவைத்து இருக்கவேண்டும். புகார்கள் கூறினால் தொடர்புடைய அதிகாரிகள் 48 மணி நேரத்தில் விசாரணை செய்ய வேண்டும்’’

**சில உதாரணங்கள்:**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்துக்கு அருகில் உள்ள கத்தரிபுலத்தில் வேன் கவிழ்ந்து 11 குழந்தைகளோடு ஆசிரியரும் இறந்தார். அதற்குப் பிறகுதான் பள்ளிக்கு அங்கீகாரம் இல்லை. வேனுக்கு ஆர்.சி.புக், பதிவு இல்லை எனத் தெரிய வந்தது.

கும்பகோணம் தீவிபத்துக்குப் பிறகு, சம்பத் கமிஷன் அறிக்கை பள்ளிகளுக்கான கட்டிட விதிமுறைகளை நிர்ணயித்தது. கட்டிடங்கள் சரியாக இல்லாத, அங்கீகாரம் இல்லாத எத்தனை பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது? என்று பார்த்தால் பதிலே இல்லை. இதற்கெல்லாம் காரணம் கொண்டு வந்த திட்டங்களை செயல்படாமல் இருப்பதுதான்.

**தீர்வுகள்**

2007 - 12ல் குழந்தைகள் ஒருங்கிணைந்த பாதுகாப்பு திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை. நிராகரிக்கப்பட்டவர்கள், தெருவோரக்குழந்தைகள், அனாதைகள் போன்றவர் களைப் பாதுக்காக்க குழந்தைப் பாதுகாப்புக் குழு மாவட்ட அளவில் ஏற்படுத்தவேண்டும் என சொல்லப்பட்டது. இன்னும் அது முழுமையாக இல்லை.

ஆசிரியர் குழு

# 2017 முதல் அனைத்து செல்போன்களுக்கும் ''பேனிக் பட்டன்'' கட்டாயம்

2017-ம் ஆண்டு முதல் இந்தியாவில் விற்பனை செய்யப்படும் அனைத்து மொபைல் போன்களிலும் “பேனிக் பட்டன்” பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ஆபத்து காலங்களில் இந்த பேனிக் பட்டனை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆபத்து நேரத்தில் ஒருவர் பேனிக் பட்டனை அழுத்தினால் அருகிலிருக்கும் பாதுகாப்பு மையத்துக்கு ஒரு அழைப்போ அல்லது குறுஞ்செய்தியோ அனுப்பப்படும். இருப்பினும், இந்த செயல்பாடு எப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்பது இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

அனைத்து மொபைல் போன்களிலும் பேனிக் பட்டன் மற்றும் குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் வசதி ஏற்படுத்தும் திட்டம் 2016-ன் கீழ் (The Panic button and Global Positioning System facility in all mobile phone handsets Rules, 2016) அறிக்கை ஒன்றை தொலைத் தொடர்பு துறை கடந்த 22-ம் தேதி வெளியிட்டிருக்கிறது.

இதன்படி 2017 ஜனவரி 1 முதல் இந்தியாவில் உள்ள அனைத்து மொபைல் போனிலும் பேனிக் பட்டன் வசதி இருப்பது அவசியம். அதேபோல், 2018 ஜனவரி 1 முதல் அனைத்து மொபைல் போன்களிலும் உட்கட்டமைக்கப்பட்ட ஜிபிஎஸ் வசதியும் இருப்பது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பம் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் இந்த திட்டம் கொண்டு வரப்படுவதாக மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

# கேடு விளைவிப்பது உறுதியானால் மைதா மாவை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்; உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு துறை ஆணையருக்கு, ஐகோர்ட்டு உத்தரவு

அலொக்சான்' ரசாயன கலவையுடன் கூடிய மைதா மாவு மனிதர்களுக்கு கேடு விளைவிக்கும் என்று ஆய்வு மூலம் தெரிய வந்தால், அந்த மைதாவுக்கு 3 மாதங்களுக்குள் தடை விதிக்க வேண்டும் என்று உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டுத்துறை ஆணையருக்கு, ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

**ரசாயன கலவை**

கோதுமையில் உள்ள நார்ச்சத்துக்களை அகற்றி, வெள்ளை நிறத்துடன் மைதா மாவு தயாரிக்கப்படுகிறது. இந்த மைதா வெண்மையாகவும், மிருதுவாகவும் இருக்க 'அலொக்சான்' ரசாயனப் பொருள் கலக்கப்படுகிறது.

இந்த அலொக்சான் என்பது விலங்குகளின் கணையத்தில் 'பீட்டா செல்களை' அழித்து, இன்சூலின் சுரப்பதை தடுக்க பயன்படுத்தப்படும் ரசாயன பொருளாகும். இப்படிப்பட்ட மைதா மாவு மூலம் தயாரிக்கப்படும் புரோட்டாவையும், 'பேக்கரி' கடைகளில் தயாரிக்கப்படும் ரொட்டிகள், கேக் வகைகளையும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சாப்பிடுகின்றனர்.

**நீரிழிவு**

இதனால், மனிதர்களின் கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் அழிக்கப்படுகிறது. இன்சூலின் சுரப்பது தடுக்கப்பட்டு, ஏராளமானோர் நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இந்த பாதிப்பு அதிகரிக்க நேரிடும். இதை தெரிந்துக் கொண்டுதான், இந்த வகையான மைதா மாவுகளுக்கு, அமெரிக்கா போன்ற நாடுகள் தடை விதித்துள்ளது.

மனிதர்களை மெதுவாக கொல்லும் விஷம் என்று ரசாயன கலவை கொண்ட மைதா மாவை, டாக்டர்கள் அழைக்கின்றனர். எனவே, அலொக்சான் மைதா குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உணவு தரக்கட்டுப்பாட்டு துறை அதிகாரிகளிடம் கடந்த மார்ச் மாதம் விளக்கம் கேட்டு மனு கொடுத்தேன். ஆனால், இதுவரை பதில் எதுவும் அளிக்கவில்லை. எனவே, அலொக்சான் மைதாவை தடை விதிக்க வேண்டும் என்று தமிழக உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டுத்துறை ஆணையர், சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்தகத்துறை இயக்குனர் ஆகியோருக்கு



உத்தரவிடவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சஞ்சய்கிஷன் கவுல், நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:-

இந்த மனு மீதான விசாரணையின் போது, உணவு தரம் தொடர்பான விஷயத்தில் மனுதாரர் நிபுணத்துவம் பெற்றவர் இல்லை என்பது தெரிகிறது.

**தடை விதிக்க வேண்டும்**

அதேநேரம், மைதாவில் ரசாயன கலவை உள்ளது. அது மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது என்று மனுதாரர் கூறும் காரணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆனால், இந்த நிலையில், எங்களால் மனுதாரர் கொடுத்த மனுவை பரிசீலிக்கும்படிதான் அதிகாரிகளுக்கு உத்தரவிட முடியும்.

எனவே, மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில், தமிழக உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டுத்துறை ஆணையர் ஆய்வுகளையும், விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டும். அப்போது மனுதாரர் கூறும் குற்றச்சாட்டுக்கு உண்மை இருப்பதாக தெரியவந்தால், ரசாயன கலவை கொண்ட மைதாவை தடைவிதிக்க சட்டப்படியான நடவடிக்கைகளை 3 மாதங்களுக்குள் மேற்கொள்ள வேண்டும். இந்த மனுவை முடித்து வைக்கிறோம்.

இவ்வாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

# மின் உற்பத்திக்காக நிலக்கரி எரிக்கப்படுவதால் சீனா, இந்தியாவில் மழை குறையும்: ஆய்வில் எச்சரிக்கை

வேகப் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் மின் உற்பத்திக்காக நிலக்கரியை அதிக அளவில் எரிப்பது அப்பகுதியில் மட்டுமல்லாது உலக அளவில் கூட மழையின் அளவைக் கடுமையாக குறைத்து வருகிறது, மேலும் குறைக்கவும் செய்யும் என்று அமெரிக்க தொழில்நுட்பப் பல்கலைக் கழக ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.

அனல் மின்சாரம் என்பது சீனாவின் பிரதான மின் உற்பத்தியாகும். ஆசியாவிலேயே அனல் மின் உற்பத்திதான் பிரதானமாக விளங்குகிறது. இதனால் சல்.ஃ.பர் டையாக்சைடு என்ற புவி வெப்பமடைதல் வாயு அதிகமாக வெளியேற்றப்படுகிறது. இந்த தூசிவாயு வெளியேற்றம் பொது ஆரோக்கியத்துக்கு அச்சுறுத்தல் என்பதோடு உள்நாட்டு மற்றும் உலக அளவிலான பருவ நிலை மாற்றத்துக்கு பெரிய அளவில் பங்களிப்பு செய்து வருவதாக இந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

எனவே வரும் காலங்களில் ஆசிய நாடுகளின், குறிப்பாக இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் எரிசக்தி உற்பத்தி தெரிவைப் பொறுத்துதான் பருவ நிலை தீர்மானிக்கப்படும் என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சியை குறிவைத்து உற்பத்தியைப் பெருக்கி வரும் இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் நிலக்கரி எரிப்பு அதிகமாகியுள்ளதே தவிர குறையவில்லை என்று கூறும் இந்த ஆய்வு இதனால் எதிர்கால பருவநிலையில் கடும் தாக்கங்கள் ஏற்படும் என்று எச்சரித்துள்ளது. எனவே கரியமில வாயுவை குறைவாக வெளிப்படுத்தும் எரிசக்தி உற்பத்தி தொழில்நுட்பத்தை இந்தியா, சீனா ஆகிய நாடுகள் தெரிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்கிறது.

அதாவது சல்.ஃ.பர் டையாக்சைடின் அதிக வெளியேற்றம் விண்வெளியின் கீழடுக்கு, மேலடுக்கு ஆகியவற்றின் மீது இரு தீவிர எதிர்நிலைகளில் தாக்கம் ஏற்படுத்தும். அதாவது தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் ஒரு புறம் குளிரையும் அதிகமாக உணர முடியும் என்று கூறும் இந்த ஆய்வு. ஒரு புறம் மழையைக் குறைக்கும், கடலின் மேல்புற வெப்பநிலையை அதிகரிக்கும் மறுபுறம் சில பகுதிகளில் குளிரையும் அதிகப்படுத்தும் இப்படியாக கணிக்க முடியாத ஒரு பரிமாணத்தில் இதன் விளைவுகள் இருக்கும் என்று கூறுகின்றனர் இந்த ஆய்வாளர்கள்.

“அதிக அளவில் வெப்ப வாயுக்கள் வெளியேற்றத்தினால், தூசிவாயுக்கள் ஆசிய பகுதிகளில் பல முக்கிய பருவநிலைகளில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தும். இதனால் சீனா, இந்தியாவில் மழை குறைந்து ஆஸ்திரேலியாவில் மழை அதிகரிக்கும் என்பதோடு ஆப்பிரிக்காவின் சாஹெல் பகுதியில் மழையின் அளவை கடுமையாகக் குறைத்து விடும். ஏற்கெனவே நீரின்றி வறண்டு கிடக்கும் பகுதிகளில் மேலும் மழை குறையவே செய்யும் என்று இந்த ஆய்வின் உறுப்பினர் பெஞ்சமின் கிராண்டி எச்சரித்துள்ளார்.



# வீட்டில் தனியாக இருக்கும் பெண்களுக்கு போலீசார் கூறும் அறிவுரைகள்

பகல் நேரங்களில் வீடுகளில் தனியாக இருக்கும் பெண்கள் பல்வேறு அபாயங்களை சந்திக்க வேண்டியுள்ளது. யாராவது மர்ம ஆசாமிகள் வீடுகளில் புகுந்து தனியாக இருக்கும் பெண்களிடம் நகைகளை கொள்ளையடித்து சென்று விடுகின்றனர்.

தனியாக இருக்கும் பெண்கள் கொலை செய்யப்படும் சம்பவங்களும் நடக்கின்றன. நகை பாலிஷ் செய்வதாக சொல்லி தனியாக இருக்கும் பெண்களிடம் மோசடி கும்பல் நகைகளை அபகரித்து செல்லும் நிகழ்வுகளும் நடக்கின்றன. வீடுகளில் தனியாக இருக்கும் பெண்கள் தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ள 12 ஆலோசனைகளை சென்னை நகர போலீசார் வெளியிட்டுள்ளனர். இது சென்னை நகருக்கு மட்டுமின்றி எல்லா ஊர்களுக்கும் பொருந்தும் எச்சரிக்கை - அறிவுரை என்றே சொல்லலாம்.

**போலீசார் வழங்கியுள்ள 12 அறிவுரைகள்:**

1. வீட்டில் பெண்கள் தனியாக இருக்கும்போது கதவை உள்பக்கம் பூட்டிக்கொள்ள வேண்டும். கதவை திறந்து போட்டுக் கொண்டு வீட்டு வேலைகளை செய்யக்கூடாது.

2. வீட்டு கதவின் முன்புறம் கண்டிப்பாக ”லென்ஸ்” பொருத்தினால் நல்லது. வீட்டின் மர கதவுக்கு முன்பாக கண்டிப்பாக இரும்பு கிரில் கதவுகள் பொருத்த வேண்டும்.

3. ஷாப்பிங் அல்லது மார்க்கெட் செல்லும்போது அங்கு புதிய நண்பர்கள் யாரிடமாவது பழக்கம் ஏற்பட்டால் உடனே அவர்களை வீட்டிற்கு அழைத்து வராதீர்கள். புதிதாக பழகுபவர்களிடம் வீட்டில் தனியாக இருக்கும் விஷயத்தையும் சொல்லாதீர்கள். தங்கள் கணவர்கள் எப்போது அலுவலகம் செல்வார்கள், எப்போது வீடு திரும்புவார்கள் என்பன போன்ற விஷயங்களையும், கணவர் வெளியூர் செல்லும் விஷயங்களையும் புதிதாக பழகுபவர்களிடம் பெண்கள் சொல்லக்கூடாது.

4. தற்காப்பு கலை: வீடுகளில் தனியாக இருக்கும் இளம் பெண்கள் தற்காப்பு கலைகளான கராத்தே போன்ற கலைகளை கற்றுக்கொண்டால் நல்லது. திடீரென்று கொள்ளையர்களாக மாறும் நண்பர்களை சாதுர்யமாக சமாளிக்க வேண்டும். நகைகளை கொடுக்கமாட்டேன் என்று சத்தம் போட்டு ஆபத்தை வரவழைப்பதைவிட, கொள்ளையர்களிடம் புத்திசாலித்தனமாக பேசி அவர்களை வீட்டிற்குள் தள்ளி கதவை பூட்டிவிடலாம். அல்லது மிளகாய் பொடி போன்ற பொருளை கொள்ளையர்களின் கண்ணில் தூவி சமாளிக்கலாம்.

5. அறிமுகம் இல்லாத நபர்களையோ, அல்லது ஓரளவு தெரிந்த நபர்களையோ சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக வீட்டிற்குள் அனுமதிக்க நேர்ந்தால் அவர்கள் குடிநீர் கேட்டால் கொடுக்காதீர்கள். அவர்கள் எதற்காக வந்தார்களோ அந்த விஷயத்தை மட்டும் பேசிவிட்டு உடனடியாக வெளியே அனுப்பி விடுங்கள்.

6. வீட்டு வேலைக்காரர்கள், கார் டிரைவர்கள், சமையல்காரர்களை நியமிக்கும்போது அவர்களின் பெயர் உள்பட முழு விவரங்களையும் சேகரிக்க வேண்டும். அவர்களுடைய புகைப்படம் மற்றும் கைரேகையை எடுத்து வைப்பதும் நல்லது. கைரேகையை எடுத்து வைத்தால் திருடும் எண்ணமுள்ள வேலைக்காரர்கள் கூட பயந்து போய் திருடமாட்டார்கள்.

7. முதியவர்கள் : வீடுகளில் வயதான பெண்கள் தனியாக இருக்கும் நிலை ஏற்பட்டால் பணம் மற்றும் நகைகளை வங்கி லாக்கரில் கண்டிப்பாக வைக்க வேண்டும். யாராவது மர்ம நபர்கள் புகுந்து வயதான பெண்களை எளிதில் ஏமாற்றி நகை மற்றும் பணத்தை எடுத்து செல்வதை இதன் மூலம் தடுக்கலாம்.

8. அடுக்குமாடிகள் மற்றும் பங்களா போன்ற வீடுகளில் வசிக்கும் பெண்கள் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் நட்போடு பழக்கம் வைத்துக்கொண்டால் ஆபத்து நேரங்களில் பக்கத்து வீட்டுக்காரர்கள் உதவி செய்ய வாய்ப்பாக இருக்கும்.

9. ஜோதிடர்கள்: ஜோதிடர்கள், குறி சொல்பவர்கள், போலி சாமியார்கள், நகை பாலிஷ் போடுபவர்கள், பழைய பொருட்கள் வாங்குபவர்கள் போன்ற நபர்களை, தனியாக இருக்கும் பெண்கள் தங்கள் வீட்டிற்குள் அனுமதிக்க கூடாது. பால்காரர்,

பேப்பர்காரர், காய்கறி விற்பவர், கேபிள் டி.வி. ஆபரேட்டர், சமையல் கியாஸ் சிலிண்டர் கொண்டு வருபவர், சலவைகாரர் போன்றவர்களின் பெயர்கள், அவர்களது முகவரி போன்றவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களை பெரும்பாலும் வீட்டிற்குள் அனுமதிக்காமல் இருப்பது நல்லது. வெளியில் வைத்தே காரியத்தை முடித்துவிட்டு, அவர்களை அனுப்பிவிடுவது சால சிறந்தது.

10. டெலிபோன் எண்கள் : அடுக்குமாடி குடியிருப்பில் தனியாக இருக்கும் பெண்களை, பார்வையாளர்கள் யாராவது பார்க்க வந்தால், அவர்களை காவலாளிகள் நன்கு விசாரிக்க வேண்டும். அந்த பார்வையாளர்களின் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். பார்வையாளர்கள் வந்திருக்கிறார்கள் என்ற விஷயத்தை சம்பந்தப்பட்ட பெண்ணிடம் தகவல் சொல்லி அவர்கள் அனுமதித்தால் மட்டுமே பார்வையாளர்களை வீட்டுக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்.

11. ஒவ்வொரு வீட்டிலும் அருகிலுள்ள போலீஸ் நிலைய தொலைபேசி எண், தீயணைப்புத்துறை டெலிபோன் எண், அவசர போலீஸ் தொலைபேசி எண், அல்லது தங்களுக்கு தெரிந்த போலீஸ் துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் தொலைபேசி எண் போன்றவற்றை ஒரு டைரியில் எழுதி வைத்திருக்கலாம். அல்லது டெலிபோன் எண்களை ஒரு பேப்பரில் எழுதி சுவரில் ஒட்டி வைத்திருக்கலாம். ஆபத்து காலங்களில் இந்த டெலிபோன் எண்கள் மூலம் தொடர்பு கொண்டு உதவி கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

12. இதேபோல, போலீசார் சமுதாயத்தில் நடக்கும் மற்ற குற்றங்களை தடுக்கும் வழிமுறைகளையும் துண்டு பிரசுரங்களாக அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகிக்க உள்ளனர். பொது மக்களும் அக்கரை எடுத்துக் கொண்டு, இந்த அறிவுறைகளை நோட்டீஸாக அடித்து ஒவ்வொரு வீட்டிற்கும் வினியோகிக்கலாம். இளைய சமுதாயம் இதில் முனைப்புடன் செயல்பட்டால் குற்றங்கள் குறையும்

# மாநில நுகர்வோர் சேவை மையத்தினால் தீர்த்து வைக்கப்பட்ட புகார்கள்

முகமது இப்ராஹிம் என்பவர் சென்னை அடையாரில் உள்ள ஸ்ரீ ராஜ் எலக்ட்ரானிக்ஸ் கடையில் Panasonic மைக்ரோ ஓவன் ஒன்றை வாங்கியுள்ளார். சிறிது நாட்களிலேயே அந்த ஓவன் பழுதடைந்துள்ளது. அதனை ஸ்ரீ ராஜ் எலக்ட்ரானிக்ஸ் கடையில் தெரிவித்து சரி செய்து தர கோரிய போது அதற்கு ரூ.2,300 கேட்டுள்ளனர். மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக இப்ராஹிமுக்கு இலவசமாக பழுது சரி செய்து தரப்பட்டது.

மும்பையை சேர்ந்த திரு. சந்திர சேகர் என்பவர் ஆகஸ்டு 2013ல் Panasonic டிவி ஒன்றை வாங்கியுள்ளார். அதற்கு 3 வருட வாரண்டியும் இருந்த நிலையில் அந்த டிவி பழுதடைந்து விட்டது. பின்னர் அவர் Panasonic வாடிக்கையாளர் சேவையினை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்களிடமிருந்து உரிய பதில் கிடைக்கப்பெறவில்லை. மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக அவருக்கு அதற்கு பதிலாக வேறு டிவி மாற்றித் தரப்பட்டது.

சென்னையை சேர்ந்த பாலாஜி என்பவர் சங்கம் சினிமாஸ் திரையரங்கில் ரூ.780 க்கு சிற்றுண்டிகளை வாங்கியுள்ளார். ஆனால் அவரிடம் ரூ.796 வசூலிக்கப்பட்டது. மாநில நுகர்வோர் சேவை மையம் அத்திரையரங்க நிறுவனத்தினை தொடர்பு கொண்டு பேசிய போது தவறுதலாக ஏற்பட்டு விட்டதாக கூறி பாலாஜிக்கு மீதி தொகையினை உடனடியாக வழங்கி விட்டனர்.

சபீனா என்பவர் வோல்டாஸ் ஏசி ஒன்றை சர்வீஸ் செய்வதற்காக கொடுத்துள்ளார். ஆனால் சிறிது நாட்களிலேயே அதே போல பிரச்சினை மீண்டும் ஏற்பட்டுள்ளது. அவர் அந்த சர்வீஸ் நிறுவனத்தினை தொடர்பு கொண்டு பேசிய போது அந்நிறுவனத்திடம் இருந்து போதிய பதில் கிடைக்கப்பெறவில்லை. மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக ஏசி உடனடியாக சர்வீஸ் செய்து கொடுக்கப்பட்டது.

# நகரமயமாதல் செய்த கொலைகள்!...ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்!

நாம் வாழும் வாழ்க்கை இன்று முற்றிலும் மாறிவிட்டது. எது நல்லது, எது சுத்தமானது என்ற எந்த உண்மையும் தெரியாமல் நமக்கு நல்லது என்று சொல்லப்படுபவை மட்டுமே நமக்கு சுத்தமானவையாகக் கண்களுக்கு தெரிகின்றன.

அதுதான் நகரமயமாதலும் உலகமயமாதலும் கண்ட வெற்றி. இதனால் பன்னாட்டு பெரு நிறுவனங்கள் லாபம் அடைந்தன. நகரங்களும், அதனால் லாபமடைந்த நிறுவனங்களும் நமக்குப் பல வசதி வாய்ப்புகளைக் கொடுத்திருக்கலாம். ஆனால் நாம் நம்முடைய அழகான கிராமங்களை, ரம்யமான அழகை, சுகமான மற்றும் சுகாதாரமான வாழ்க்கையை இழந்துவிட்டோம். நகரத்தின் பரபரப்புகளில் தொலைந்து போய்விட்டோம்.

1800 ஆம் ஆண்டுகளில் 2% மக்கள் மட்டுமே நகரங்களில் இருந்தனர். இது 1960ல் 34% என்றானது. 2014ல் 54% பேர் நகரவாசிகள். இந்த கணக்கின்படி 2050ல் 65 முதல் 85% வரையிலான மக்கள் நகரவாசிகளாக இருப்பார்கள்.

**வெப்பமயமாதலின் விளைவுகள்:**

நகரங்களில் நாளுக்குநாள் நெருக்கடி அதிகமாவதால் கட்டடங்கள் அதிகரிக்கின்றன. கார்பன் வெளியீடு அதிகமாகிறது. இதனால் வெப்பமாதல் அதிகரிக்கிறது. கிராமங்களைக் காட்டிலும் நகரங்கள் 15-30% அதிகமாக சூடாகின்றன. இதனால் கோடைக் காலங்களில் மின்சார தேவை 2% கூடுதலாக தேவைப்படுகிறது. வீடுகளில் வெப்பத்தைத் தணிக்கவே வழக்கமானதை விட 5-10% கூடுதலாக மின்சாரம் தேவைப்படுகிறது.

**நகரத்தினால் விளைந்த சுற்றுச்சூழல் கொலைகள்:**

நகரத்தினால் ஏற்பட்ட சூற்றுச்சூழல் சீர்கேடுகளால் நடக்கும் கொலைகள் ஏராளம். ஆண்டுக்கு 24 லட்சம் பேர் காற்று மாசுபாட்டினால் மட்டுமே இறக்கிறார்கள். இதற்கு காரணம் நகரத்தைச் சுற்றிய பகுதிகளில் 35% பசுமைத் தாவரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. காற்றையும் நிலத்தையும் சுத்தம் செய்யும் தாவரங்கள் இல்லாமல் எப்படி நம்மால் இதிலிருந்து தப்ப முடியும். டிபி என்று சொல்லப்படும் காச நோய் நகரத்தில் உள்ள 60% பேருக்கு உள்ளது.

வாழ்தலின் சமநிலையைப் பாதுகாக்கும் உயிரினங்களும் கொல்லப்படுகின்றன. நகரமயமாதலின் விளைவுகளால் மட்டுமே 139 நீர்நிலவாழ் உயிரினங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன. 41 பாலூட்டி உயிரினங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன. 25 பறவைகள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன.

**மனிதன் எப்படியெல்லாம் கொல்லப்படுகிறான்?**

மனிதனைக் காற்றும் நீருமே அதிகமாகக் கொல்கின்றன. காற்றையும், நீரையும் மாசுபடுத்தியதன் விளைவு அவனையே வந்து சேர்கிறது. இருதயக் கோளாறு, சுவாசப் பிரச்னைகள், காச நோய், மலேரியா, டயேரியா, போன்ற பல நோய்கள் காற்று மற்றும் நீர் மாசுபாட்டினால்தான் உருவாகிறது.

**தீர்வுதான் என்ன?**

நம்முடைய மகிழ்ச்சியான தருணங்களை மீண்டும் மீண்டும் நினைத்து சந்தோஷப்பட, நாம் உயிருடன், அதைவிட முக்கியமாக ஆரோக்கியமாக வாழ்ந்தாக வேண்டும். மனிதர்கள் உயிருடன் வாழத் தகுதியான ஒரே இடமாக இந்தப் பிரபஞ்சத்தில் இந்த பூமி மட்டும்தான் இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு பொக்கிஷத்தை ஒவ்வொரு நாளும், மரங்களை வெட்டுவது, நீர்நிலைகளை நாசப்படுத்துவது, காற்றை மாசுபடுத்துவது என கொஞ்சம் கொஞ்சமாகக் கொலை செய்துகொண்டிருக்கிறோம். நகரத்தின் பரபரப்பான வாழ்க்கை, நமக்கு சுற்றுச்சூழல் பற்றி சிந்திக்க நேரம் கொடுப்பதில்லை. ஆனால் சில விஷயங்களை நம்மால் செய்ய முடியும்.

1. பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்ப்பது
2. வீட்டு மாடிகளில் தோட்டம் அமைப்பது
3. குறைந்த தூரங்களுக்கு சைக்கிளில் செல்வது
4. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது
5. குப்பைத் தொட்டியைப் பயன்படுத்துவது
6. எச்சில் உமிழ்வதைக் குறைத்தல்
7. பேப்பர்களுக்கு பதிலாக இ-டிக்கட்டுகளைப் பயன்படுத்துவோம்
8. அசைவ உணவுகளைக் குறைத்து, சைவ உணவுகளை உண்வோம்
9. பழையப் பொருட்களை மீண்டும் உபயோகிக்கும் வகையில் மாற்றுவோம்
10. தேவைக்கு மீறி ஏதையும் பயன்படுத்த வேண்டாம்.

- நன்றி விகடன்

# இந்தியாவின் தேசிய அவசர அழைப்பு எண் 112 : மத்திய அரசு முடிவு

இந்தியாவில் அனைத்து அவசர அழைப்புகளுக்கும் 112 என்ற எண்ணை அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது இந்தியாவில் காவல்துறை உதவிக்கு 100, மருத்துவ உதவிக்கு 108, மேலும் 101, 102 என பல்வேறு எண்கள் அவசர அழைப்புகளுக்காக செயல்பட்டு வருகிறது. ஆனால் அமெரிக்காவில் எந்த ஒரு அவசர அழைப்பாக இருந்தாலும் 911, இங்கிலாந்தில் 999 போன்ற எண்களை அவசர உதவிக்காக செயல்படுத்தி வருகின்றன.

எனவே இந்தியாவிலும் அனைத்து அவசர கால உதவி அழைப்புகளுக்கும் அமெரிக்காவில் இருப்பது போன்று ஒரே எண்ணை அறிவிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையமான ட்ராய் தனது அறிக்கையில் பரிந்துரை செய்திருந்தது. இந்நிலையில் தற்போது 112-ஐ இந்தியாவின் தேசிய அவசர எண்ணாக கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் புதிய அவசர ஹாட்லைன் எண்ணான 112-ல் காவல்துறை(100), தீயணைப் புத்துறை(102), ஆம்புலன்ஸ்(103) மற்றும் அவசர பேரிடர் மேலாண்மை(108) ஆகியவற்றின் எண்களும் சேர்க்கப்படும். போகப் போக அனைத்து அவசர உதவி எண்களும் 112 உடன் ஒருங்கிணைக்கப்படும் என்றும் இந்த சேவை ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளிலும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவறான விளம்பரங்கள்

திசை திருப்பும் விளம்பரங்களைக் கட்டுப்படுத்தும் ASCI நிறுவனம் கடந்த பிப்ரவரி மாதத்தில் இது போன்ற விளம்பரங்களை எதிர்த்து சுமார் 80 புகார்களைப் பெற்றன. கல்வித் தொடர்பான விளம்பரங்கள் 48ம் உடல் நலம் தொடர்பான 18 விளம்பரங்களும் உணவு தொடர்பான விளம்பரங்கள் 5ம் இதில் அடங்கியது.

ரிலையன்ஸின் 3ஜி விளம்பரம், பாரதி ஏர்டெலின் 4ஜி விளம்பரம், வோடபோன் நிறுவனத்தின் 4ஜி விளம்பரம் ஆகியவை மிகைப்படுத்தப்பட்டதாக கருதப்பட்டது.

HP யின் “கார்ட்ரிட்ஜ்” 480 பக்கங்களுக்கு வரும் என்பது உண்மைக்குப் புறம்பான விஷயமாக கருதப்பட்டது.

சன்பீஸ்ட் பிஸ்கெட்டின் விளம்பரம் மற்றும் இரண்டு பெண்கள் சாலையில் நடனமாடுவது, Genx Nano காரின் விளம்பரம் ஆகியவை உண்மையற்றதாக இருந்தது.

லை.ஃ.பாய் சோப்பின் விளம்பரத்தில் உள்ள வாசகங்கள் மெய்ப்பிக்கப்படவில்லை.

இது போலவே டவ் ஷாம்பு விளம்பரமும் தலைமுடி உதிர்வதைக் குறைக்கும் என்பது உண்மைக்கு மாறானது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ASCI நிறுவனம் விளம்பரதாரர்களை உள்ளடக்கிய ஒரு நிறுவனம் ஆகும். இவர்கள் அவ்வப்போது இவர்களுக்கு வரும் அச்சு மற்றும் தொலைக்காட்சி விளம்பரம் பற்றிய புகார்களை விசாரித்து முறையற்ற விளம்பரதாரர்களை அவ்விளம்பரங்களை மாற்றுமாறு கோருகிறார்கள். இவர்கள் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, விளம்பரங்கள் மாற்றப்படுகின்றன.

உங்களுக்கு ஏதாவது விளம்பரம் தவறு என தெரிந்தால் ASCIஐ தொடர்பு கொள்ளுங்கள்

முகவரி:-
ASCI,
717/B, AURUS Chambers, SS Amrutwar marg worli,
Phone No: 18o0222724 மின்னஞ்சல் முகவரி:
contact@ascionline.org whatsapp number: 91/7710012345

ASCI
ADVERTISING WITH A CONSCIENCE

# மருந்துகள் விலைக்குறைப்பு

இந்திய அரசின் National Pharmaceutical Pricing Authority (NPPA) (தேசிய மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணையம்) இந்த ஆண்டில் 2வது முறையாக 54 முக்கிய மருந்துகளின் விலையைக் குறைக்க ஆணையிட்டுள்ளது. மருந்துகள் விலை நிர்ணய ஆணை 2013 என்ற அரசாணைக்கு இணங்க, இவ்வாணையம் அவ்வப்போது இது போன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றன. இவற்றின் மேல் மேல்முறையீடு செய்ய மருந்து தயாரிப்பாளர்களுக்கு அவகாசம் கொடுத்த பின் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

ரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோய்களுக்கான இம்மருந்துகளின் விலை 55% வரை குறைக்கப்பட்டுள்ளன. மருந்துகள் இந்த விலைக்கு மேல் விற்கப்படுவது தெரிந்தால் இந்நிறுவனம் தொடர்புடைய நிறுவனங்களுக்குப் பணம் பிடித்தம் செய்யப்படுகிறது.

உதாரணத்திற்கு,

Phenytoin, Temozolomide, fluoxetine, cycloserine, clindamycin, clopidogrel, ciprofloxacin, azithromycin, ramipril, metroprolol, loperamide, diltiazem, pencillamine, cholecalciferol, tramadol



# அழைப்பில் துண்டிப்பு

மேசை தொலைபேசியில் இருந்த தொல்லைகளில் ஒன்று Wrong Number எனப்படும் தவறான அழைப்புகள் ஆகும். இதனால் இப்பொழுது கைப்பேசி அதிகம் பயன்படுத்தும் காலத்தில் நம்மைப் பெரிதும் பாதிப்பது "துண்டிக்கப்படும் அழைப்புகள்". இதனால் நாம் அழைத்தவருடன் பேச முடியாமல் போவதுடன் அழைப்பிற்கான கட்டணத்தையும் நாம் செலுத்த வேண்டி உள்ளது

கைப்பேசி தொடர்பு நிறுவனங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம்,

- தொலைத் தொடர்பு
- அழைப்புகளின் தன்மை
- குரல் தன்மை

அகியவற்றை ஆராய்ந்து 3 மாதங்களுக்கு ஒரு முறை தனது வலைதளத்தில் அவர்களது தரத்தைக் கண்காணிக்கிறது

இவற்றில் இவ்வாறு துண்டிக்கப்படும் அழைப்புகளின் அளவு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டு நிறுவனங்களை தங்கள் செயல்பாட்டை சீர் திருத்துமாறு கேட்டுக் கொண்டும் இதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டுவர, நிறுவனங்களுக்கு அபராதமாக ஒவ்வொரு துண்டிக்கப்படும் அழைப்புக்கும் ரூ.1 ஐ நுகர்வோருக்கு அளிக்க வேண்டும் என்ற உத்தரவை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் இது விசாரணைக்கு வந்த போது, நிறுவனங்களின் செயல்பாட்டை கண்டித்த நீதிமன்றம், TRAI அமைப்பின் அபராதமான ரூ.1/- எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பதை தெளிவாக குறிப்பிடாததால் இந்த உத்தரவினை ரத்து செய்துள்ளது.

ஆனாலும் இதில் மேல்முறையீடு செய்ய TRAI அமைப்பு உத்தேசித்துள்ளது.

TRAI

सत्यमेव जयते

Telecom Regulatory Authority of India

(IS/ISO 9001-2008 Certified Organisation)

# எங்களைக் கேளுங்கள்– சொத்துப் பத்திரங்கள் தொலைந்துவிட்டால் என்னதான் தீர்வு?

பத்திரத்தின் அசல் (Original) ஆவணங்கள் தொலைந்துவிட்டால், உடனடியாக அது தொலைந்த இடத்துக்கு அருகில் இருக்கும் காவல் நிலையத்தில், தொலைந்த பத்திரங்களின் விவரங்களைத் தெளிவாக எழுதி, ஒரு புகார் கொடுக்க வேண்டும். அதில் அந்த பத்திரங்களை கண்டுபிடித்துத் தரும்படி கேட்க வேண்டும்.

காவல் நிலைய அதிகாரிகள் உங்கள் மனுவை பதிவு செய்துகொண்டு ஆவணங்களைக் கண்டுபிடிக்க முயற்சிப்பார்கள். காணாமல் போன ஆவணங்கள் கிடைத்தால், புகார் செய்தவரிடம் தந்துவிடுவார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் கண்டுபிடிக்க முடியவில்லை எனில், கண்டுபிடிக்க முடியவில்லை (Non Traceable Certificate) என சான்றிதழ் தந்துவிடுவார்கள்.

அதனைப் பெற்றுக்கொண்டவுடன், அதைக் காண்பித்து தங்களுக்கு தெரிந்த வழக்கறிஞர் மூலமாக இரண்டு பிரபலமான நாளிதழ்களில் (ஒரு ஆங்கில நாளிதழ், ஒரு தமிழ் நாளிதழ்) பத்திரங்கள் காணவில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் கண்டெடுப்பவர் வழக்கறிஞரிடம் தரவேண்டும் என்றும் விளம்பரம் செய்ய வேண்டும்.

தொலைந்த சொத்து பத்திரங்களை யாராவது கண்டெடுத்து, வழக்கறிஞரிடம் தந்தால், நாம் அந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு கிடைக்கவில்லை எனில், பத்திரப் பதிவு அலுவலகங்களில் இருந்து பெறப்பட்ட பத்திரங்களின் நகலை (Certified Copies of the Documents) காணாமல் போன அசல் (Original) ஆவணங்களுக்கு பதிலாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்படி அசல் பத்திரம் காணாமல் போன சொத்துக்களை வாங்குபவர் கவனிக்க வேண்டியவை என்ன என்பதைப் பார்ப்போம்.

காவல் நிலையத்தில் புகார் செய்தபின், அசல் சொத்துப் பத்திரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று காவல் நிலையம் தரும் சான்றிதழ், பத்திரிகைகளில் வெளியான விளம்பரங்கள் போன்ற ஆவணங்களை, தங்களின் வழக்கறிஞரிடம் காண்பித்து அவர் ஒப்புதல் தரும்பட்சத்தில் அந்தச் சொத்தை வாங்கிக்கொள்ளலாம். புதிதாக பதிவு செய்யும் சொத்து ஆவணத்தில் அடுத்து வரும் வாசகம் கட்டாயம் இடம்பெறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். “இந்தச் சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லை என்று விற்பவராகிய நான் உறுதி அளிக்கிறேன். பிற்காலத்தில் இந்த சொத்தில் எந்த வில்லங்கம் ஏற்பட்டாலும், விற்பவராகிய நான் முன்னின்று என் செலவில் வில்லங்கத்தை சரிசெய்வேன் என்று உறுதி அளிக்கிறேன்”.

அசல் ஆவணம் இல்லாத சொத்தின் மேல், வங்கியில் கடன் வாங்கும்போது சிக்கல் வர வாய்ப்பு இருக்கிறது. முன்னர் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களால் சில வங்கிகள் கடன் வழங்க தயக்கம் காட்டக்கூடும். ஏனெனில், முன்பெல்லாம் சொத்தின் ஆவணங்களை கொலாட்ரல் செக்யூரிட்டியாக (Collateral Security) கொடுத்து, வங்கியில் கடன் பெறுவார்கள். ஆனால், பத்திரப் பதிவு அலுவலகத்தில் அவ்வாறு கடனுக்காக கொலாட்ரல் செக்யூரிட்டி கொடுப்பதைப் பதிவு செய்யமாட்டார்கள். அதனால் கடன் பெறுவது வில்லங்கச் சான்றிதழில் தெரியாது.

ஒரு சிலர் பல்வேறு காரணங்களால் தாங்கள் வங்கிக்கு கொடுக்க வேண்டிய கடனைக் கொடுக்காமல், மேற்கூறியவாறு சொத்து ஆவணங்கள் தொலைந்துவிட்டது என்று காவல் நிலையத்திலும், பின்பு பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுத்து வழக்கறிஞரிடம் சான்று பெற்று சொத்தினை விற்றுவிடுவார்கள். பிற்காலத்தில் சொத்தை வாங்கியவரும், கடன் கொடுத்த வங்கியும் நீதிமன்றங்களை நாடும். பொதுவாக, கடன் கொடுத்த வங்கிதான் வெற்றி பெறும். ஆனாலும் நீண்ட கால தொல்லைகள் உண்டாகும். வாங்கியவருக்கும் நஷ்டம் ஏற்படும்.

இது மாதிரியான தவறுகள் நடக்காதிருக்க, தற்போது வங்கியில் ஆவணங்களை வைத்துக் கடன் பெற்றால், Memorandum of Deposit of Title Deeds (MOD) என்ற ஆவணம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும். இது வில்லங்க சான்றிதழில் தெரியவரும். இந்தமுறை கடந்த 10 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

பொதுவாக, சொத்தின் அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டால், அந்த சொத்தின் மதிப்பு, சந்தை

(Market) மதிப்பைவிட சற்று குறைவாகவே இருக்கும். மேலும், ஆவணங்களை தொலைத்தவர் கீழ்க்கண்ட முறையை பின்பற்றினால், வாங்குபவருக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கும்.

ஆவணங்களை தொலைத்தவர், அவருடைய மனைவி அல்லது மகன் எவருக்காவது அந்த சொத்தினை தான செட்டில்மெண்ட் (Settlement Deed) மூலம் எழுதிக் கொடுக்கலாம். இதற்கான செலவு என்பது சொத்தின் மதிப்பு 25,00,000 ரூபாய்க்கு மேல் இருப்பின் ரூ.33,000 வரை செலவாகும். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில், அந்த சொத்தினை வாங்கிய விவரம், சொத்தின் ஆவணங்கள் விவரம், அவை காணாமல் போன விவரம், காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம், வழக்கறிஞர் மூலம் பத்திரிகைகளில் விளம்பரம் அளித்த விவரம் ஆகியவற்றை முறையாக எழுதிப் பதிவு செய்யலாம்.

இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை கொண்டு, வீடாக இருந்தால் பட்டா, வீட்டு வரி ரசீது, மின் வாரிய ரசீது ஆகியவற்றை சொத்து செட்டில்மெண்ட் செய்தவர் மேல்மாற்றம் செய்துவிடலாம்.

இதனால் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உங்கள் புகைப்படத்துடன், தற்போதைய விலாசம், அதற்குறிய சான்றுகள் ஆகியவை மூலம் நீங்கள்தான் அந்த சொத்தின் உரிமையாளர் எனவும், நீங்கள் அதை மனைவிக்கோ, மகனுக்கோ செட்டில்மெண்ட் செய்துவிட்டீர்கள் எனவும் வில்லங்க சான்றிதழ் மூலம் தெரியவரும். பின்பு உங்கள் மனைவியோ அல்லது மகனோ இந்த சொத்தினை மேற்கூறிய ஆவணங்களைக் காட்டி சுலபமாக விற்கலாம்.

# முறைகேடுகளை தடுக்க ரேஷன் கடைகளில் இணையவழி கையடக்க கம்ப்யூட்டர் அறிமுகம்

தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் முறைகேடுகளை தடுக்க இணையவழி கையடக்க கம்ப்யூட்டர் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு கோடியே 85 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்களுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகள் மூலம் மானிய விலையில் அரிசி, துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில், சீனி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகிறது. ரேஷன் கடைகளுக்கு அரசு 80 சதவீத பொருட்களை மட்டுமே ஒதுக்கீடு செய்வதால் பெரும்பாலான கார்டுகளுக்கு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு உள்ளிட்ட பொருட்கள் சரிவர கிடைப்பதில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கிடங்கு குடோன்களில் இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்களில் எடை குறைவு, லோடுமேன்கள் டிப்ஸ் உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்டுவதற்காக ரேஷன் கார்டுதாரர்களுக்கே தெரியாமல் அவர்கள் நுகர் பொருட்களை வாங்கியதாக கார்டு மற்றும் பதிவேடுகளில் பதிவு செய்தும், பொருட்கள் இருப்பு இருக்கும் போதே தீர்ந்து விட்டதாக கூறியும் சில ரேஷன் கடை ஊழியர்கள் முறைகேட்டில் ஈடுபடுகின்றனர்.

இதை தடுக்க தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளுக்கும் இணையவழி கையடக்க கம்ப்யூட்டர்கள் வழங்கப்பட உள்ளது. இதில் ரேஷன் கார்டுதாரர்களின் ஆதார் எண், ரேஷன்கார்டு எண், செல்போன் எண்கள் உள்ளிட்டவை கடந்த 3 மாதமாக பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த பணிகள் அனைத்தும் ஓரிரு மாதங்களில் நிறைவு பெறும் என கூறப்படுகிறது. தொடர்ந்து ஜூன் 1ம் தேதி முதல் ரேஷன் கார்டுதாரர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை ரேஷன் கடைகளில் வாங்கும்போது அது குறித்த விவரங்கள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு அவர்களது செல்போனுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். இதன்மூலம் முறைகேடாக பதிவு செய்து பொருட்களை வெளி இடங்களில் விற்பது தடுக்கப்படும். மேலும் ஒவ்வொரு பொருட்களின் இருப்பு விபரத்தையும் எஸ்எம்எஸ் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த புதிய தொழில் நுட்பத்தால் தமிழகம் முழுவதும் ரேசன்கடைகளில் முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.





சென்னை, ஆளுநர் மாளிகையில் 23.5.2016 அன்று புதிய அமைச்சர்கள் பதவியேற்ற பிறகு மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அமைச்சரவை.



ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் 23.5.2016 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் அறைக்கு வருகை தந்து புதிய திட்டங்களுக்கான 5 கோப்புகளில் கையொப்பம் இட்டார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 2.6.2016 அன்று தலைமைச் செயலகத்தில், சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கொப்பரை விலை குறையும் போதெல்லாம் விவசாயிகளிடமிருந்து கொப்பரையை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



பொது விநியோகத்திட்ட உப்பு, பாமாயில்,மைதா மாவு ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்ட போது எடுத்த புகைப்படம்



குடிமக்கள் நுகர்வோர் மன்ற கூட்டம் காவேரிப்பட்டிணம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற போது



எத்திராஜ் மகளிர் கலை கல்லூரியில் நுகர்வோர் மாணவ மன்ற போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசளிப்பு விழா



புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி தேசிய நுகர்வோர் தின விழாவில் கலந்து கொண்ட பள்ளி, கல்லூரி மாணவ/மாணவியர்கள் மற்றும் பொது மக்களின் ஒரு பகுதியினர்



புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, தேசிய நுகர்வோர் தின விழாவில் பரிசு பெற்ற பள்ளி மாணவ மாணவியர்

# நீங்கள் அருந்தும் பால் தூய்மையானதா....ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்!

சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டின் காரணிகளில் ஒன்று தனி மனிதர்களின் பேராசை. பொருளாதார வளர்ச்சியை எந்த வழியிலும் எட்ட நினைக்கும் மனிதர்களின் பார்வைக்கு மனிதர்கள், மற்ற விலங்குகள் என்ற வித்தியாசமில்லை. சென்னையில் பால் அருந்தி வரும் லட்சக்கணக்கான மக்கள், தாங்கள் விஷம் கலந்த பாலை அருந்திக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமல் அருந்தி வருகின்றனர்

எந்த நாட்டில் தடை செய்யப்பட்ட பொருளும் இங்கு உங்கள் வீட்டின் அருகாமையில் உள்ள கடையில் எளிதாக கிடைக்கும். நாள்தோறும் மக்கள் புதுப்புது நோய்களுக்கு ஆளாகி மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருவது இதன் காரணமாகத்தான். இந்த வரிசையில், மாடுகளிடமிருந்து அதிகளவு பாலை சுரக்க செய்வதற்காக கொடுக்கப்படும் ஹார்மோன் மருந்தால், மாடுகளுக்கும் அதன் பாலை அருந்தும் மக்களுக்கும் எதிர்காலத்தில் பல்வேறு பிரச்னைகள் எழலாம் என எச்சரிக்கிறது மருத்துவ உலகம். மாட்டிற்கு தரப்படும் ஆக்சிடோசின் என்ற அந்த மருந்து, இந்தியாவில் பரவலாக பயன்படுத்த தடை செய்யப்பட்டிருப்பது என்பதும் கூடுதல் அதிர்ச்சி.

சென்னையில் மட்டும் 20,000 முதல் 25 ஆயிரம் மாடுகள் வரை இவ்வாறு ஆக்சிடோசின் கொடுத்து பால் கரக்கப்படுவதாக கூறப்படும் தகவல் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

“ஆக்சிடோசின் என்பது மாடுகளுக்கு பால் சுரப்பதற்காக, அதன் பால்சுரப்பிகளை ஊக்குவித்து பாலை சுரக்கச் செய்யும் ஒரு ஹார்மோன் மருந்து. இந்த மருந்து, மாட்டின் உடலில் எந்த விளைவையும் ஏற்படுத்தாது. நேரடியாக பாலில் கலக்கும். தொடர்ந்து இந்த பாலை அருந்தும் மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு உடல் பிரச்னைகள் தோன்ற ஆரம்பிக்கும். உதாரணத்திற்கு பெண் குழந்தைகள் 8 லிருந்து 10 வயதுக்குள் பருவமடைவர். பெண்களின் உடலில், ஹார்மோன் சமநிலை பாதிக்கப்பட்டு பல பிரச்னைகளுக்கு வழிவகுக்கும்.

தொடர்ந்து பல வருடங்கள் இந்த பாலை எடுத்துக்கொள்ளும் பெண்கள், மலட்டுத்தன்மை அடைந்து குழந்தைபெறும் தகுதியற்றவர்களாகி விடுவதும், பெண்கள் முன்கூட்டியே மெனோபாஸ் என்ற நிலையை எட்டிவிடுவர் என்பதும் இதன் விபரீதமான விளைவுகள். இதனால் ஹார்மோன் ஊசி, மாடுகளுக்கு போட தடை செய்யப்பட்டிருக்கிறது. அவசியமான நேரங்களில் தேவையை கருதி மட்டுமே மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் இதை பயன்படுத்தலாம்.

ஆனால் இது, சாதாரண தவிடு விற்கும் கடைகளில் கூட சர்வ சாதாரணமாக கிடைக்கிறது. தவிடு வாங்குபவர்களுக்கு சலுகை விலையில் இந்த மருந்தை தருவதும் கூட சில இடங்களில் நடக்கிறது. மாட்டின் உரிமையாளர்கள் தினந்தோறும் மாடுகளுக்கு இந்த ஊசியை போடுவது சென்னையில் அதிகரித்திருக்கிறது. இந்த ஊசியை போட்ட 10 நிமிடத்தில் மாட்டிற்கு பால் சுரக்க ஆரம்பித்துவிடும். ஆனால் பேராசைக்கார மனிதர்கள் மாட்டின் கடைசி சொட்டுபால் வரை கறந்துவிடுகின்றனர்.

தொடர்ந்து பாலுக்காக இந்த ஊசியை மாட்டின் உரிமையாளர்களே போடுகின்றனர். முறையான பயிற்சியின்றி தினந்தோறும் அவர்கள் போடும் ஊசிகளால் மாட்டின் பின்பகுதி மரத்துப்போய், பின்னாளில் மாட்டிற்கு உடல்நலக்குறைவு வரும்போது அதற்காக ஊசிகள் போடும்போது, அதை மாட்டின் உடல் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடும்” என அதிர்ச்சி தந்தார்.

“பொதுவாக மற்ற நகரங்களைவிட சென்னையில் பால்நுகர்வோருக்கு இயல்பாகவே பல சிக்கல்கள் உண்டு. கிராமங்களில் உள்ளது போல மாடுகளை உணர்வுப்பூர்வமாக இங்கு வளர்ப்பதில்லை. பெரும்பாலும் இங்கு வணிக நோக்கத்திலேயே வளர்க்கப்படுகின்றன.



இதனால் அவைகளுக்கான முறையான உணவுகள் தரப்படுவதில்லை. பொதுவாக மாடுகள் தவிடு, கடலை புண்ணாக்கு, வைக்கோல், புல் இவைகளையே உண்ணும். ஆனால் சென்னையில் மாடுகளுக்கு மலிவு விலை அரிசி உணவாக தரப்படுகிறது. மற்ற நேரங்களில் அதன் உணவு செலவை குறைப்பதற்காக மாடுகளை தெருக்களில் திரிய விடுகின்றனர்.

தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளுக்கு பெரும்பாலும் உணவு சுவரொட்டிகள். சுவரொட்டியை உண்ணும்போது அதன் பின்புறம் உள்ள பசையையும் சேர்த்து உண்ணுகிறது. அதில் உள்ள வேதிப்பொருள் தொடர்ந்து மாட்டின் உடலில் சேகரமாகி, அது தரும் பால் விஷமாகும் அபாயம் உருவாகிறது. இந்த பாலை அருந்துபவர்கள் இதனால் பாதிக்கப்படுவர்.

அதுமட்டுமின்றி சில சமயங்களில் பிளாஸ்டிக் பைகளில் நாம் வீசும் மிச்சமான உணவை அப்படியே மாடுகள் உண்ணும். இதனால் அந்த மாடுகள் தரும் பால் விஷத் தன்மையாகி அதை உண்பவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். மாடுகளுக்கு இது குமுளேடிவ் (Cumulative) பாய்சன் என்பார்கள். மாடுகளுக்கு இதன் பாதிப்பு உடனே தெரியாது. பிளாஸ்டிக் தொடர்ந்து உண்ணும் மாடுகள், பல வருடங்களுக்கு பிறகு ஒருநாள் திடீரென வயிறு உப்பி இறந்துவிடும். இறக்காமல் நோய்வாய்ப்படும் மாடுகள் பிழைக்க அறுவை சிகிச்சை மட்டும்தான் ஒரே தீர்வு.

ஆனால் வணிக நோக்கமுள்ள அதன் உரிமையாளர்கள், அறுவை சிகிச்சை செய்து மாடு பிழைக்கவில்லையென்றால் நட்டம் எனக்கருதி அந்த நிலையிலேயே குறைந்தபட்ச விலைக்கு விற்று விடுவர். ஆனால் கிராமங்களில் மாடுகளை உணர்வுப்பூர்வமான உறவாக கருதுவதால் அவர்கள் மட்டுமே அறுவை சிகிச்சைக்கு அழைத்து வருவர்".



இயற்கையான பாலையும் மனிதர்கள் தங்கள் பேராசையினால் நஞ்சாக்குவதால், எதிர்காலத்தில் நோயாளி சமுதாயத்தை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் உணவுகளும் நஞ்சாகும் உச்சகட்ட சுற்றுச் சூழல் சீர்கேட்டின் விளிம்பில் நிற்கிற மனித சமூகம், அதற்கான மாற்றை தேடவேண்டிய நிர்பந்தம் உருவாகியுள்ளது. குழந்தைகளின் பிரதான உணவான பாலிலும் நஞ்சு என்ற நிலையில், நாம் குழந்தைகளுக்கு பாலை தவிர்த்து பாலில் உள்ள சத்துக்களைவிட அதிகம் கூடுதல் சத்துக்கள் கொண்ட கேழ்வரகு பால், சத்து மாவு கஞ்சி மற்றும் தாய்ப்பாலுக்கு நிகரான தேங்காய்ப்பால் போன்றவற்றை இனி தர முயற்சிக்கலாம். பெரியவர்களும் அவ்வாறே கருப்பட்டி காபி, மூலிகை தேனீர், என மாற்று உணவுகளை சிந்திக்கலாம்.

**நாம் விழிக்க வேண்டிய தருணமிது...!**

- நன்றி விகடன்

கோதுமை மற்றும் மைதா மாவில் தயாராகும் பிரட் மற்றும் பன் போன்றவை பாதுகாப்பான உணவு என்று நீங்கள் நம்பி இருந்தால் இதோ ஒரு அதிர்ச்சி அறிக்கை!

இந்தியாவில் தயாராகும் இது போன்ற உணவுகளில் பொட்டாசியம் ப்ரோமேட் எனப்படும் வேதிப்பொருள் (இதனை மாவுடன் சேர்ப்பார்கள்) அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் (50மிகி/1 கிலோவிற்கு) உள்ளதாக டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) ஆய்வு ஒன்றில் கண்டுபிடித்துள்ளது. வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட இந்த வேதிப்பொருளை இந்திய உணவுதர அமைவனம் அனுமதித்துள்ளது என்பதும் இது புற்றுநோய் மற்றும் தைராய்டு நோய்களுக்குக் காரணியாக அமையும் என்பதே அனைவரின் கவலையாகும்.

# தண்ணீரை சேமிக்க சில வீட்டுக் குறிப்புகள்

- ஷவரில் குளிப்பதை விடுத்து, பக்கெட்டில் நீரை நிரப்பி குளியுங்கள்
- பல்தேய்க்கும் போது குழாயை மூடி வைக்கவும்
- அழுத்தினால் திறக்கும் குழாயினை உபயோகிப்பது சிறந்தது
- குழாய் இணைப்புகளில் ஒழுகல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்
- மழைநீரை சேமித்து வையுங்கள்
- உபயோகப்படுத்திய நீரினை தோட்டத்திற்கு பயன்படுத்துங்கள். காலையில் மட்டும் தோட்டத்திற்கு நீரினை செலுத்துங்கள்
- வாஷிங் மெஷினில் தேவைக்கு ஏற்ற அளவு நீரையே உபயோகியுங்கள். இதிலிருந்து வரும் நீரை கழிவறைகளுக்குப் பயன்படுத்துங்கள்
- கழிவறையில் உள்ள Flush Tankல் இருந்து வரும் நீரைக் கட்டுப்படுத்துங்கள்
- பாத்திரம் கழுவும் தொட்டியில் நீரை நிரப்பி பாத்திரங்களை கழுவுங்கள்
- தண்ணீர் சேமிக்கும் தொட்டியிலிருந்து அநாவசியமாக நீரை விழ செய்து வீணாக்காதீர்கள்.
- தண்ணீர் அளக்கும் கருவியைப் பொருத்துங்கள். அப்பொழுது தான் நீங்கள் செய்யும் விரயம் உங்களுக்குத் தெரியும்.



# நுகர்வோர்களுக்கு ஓர் நற்செய்தி நுகர்வோர் குறைதீர் தினம்

தமிழ்நாடு அரசின் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியேஷன் ஆ.்.ப் இந்தியாவின் சார்பில் விரைவில் “நுகர்வோர் குறைதீர்” தினம் நடைபெற உள்ளது.

இடம்: தமிழ்நாடு மகளிர் முன்னேற்ற கழக வளாகத்தில் உள்ள
**அன்னை தெரசா மகளிர் வளாகம்,**
**(வள்ளுவர் கோட்ட வளாகம்), சென்னை – 34**

அச்சமயம் தமிழ்நாட்டில் உள்ள பல தயாரிப்பு மற்றும் விற்பனை / சேவை நிறுவனங்கள், மற்றும் அரசு சேவை நிறுவனங்கள் சிலவும் (மின் விநியோகம், சாலை போக்குவரத்து, தொலைபேசி, வங்கி, காப்பீடு) கலந்து கொண்டு நுகர்வோர் குறைகளை நேரில் கேட்டு உரிய நிவாரணம் அளிக்க முன் வந்துள்ளனர். உடனுக்குடன் முடியாத புகார்களின் மேல் நடவடிக்கை எடுக்க கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியேஷன் ஆ.்.ப் இந்தியா உங்களுக்கு துணை புரியும்.

**நடைபெறும் தேதி மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இவற்றில் பங்கேற்க வரும் நுகர்வோர்களிடம் சேவைக்கட்டணமாக ஒரு சிறிய தொகை வசூலிக்கப்படும். சென்னையை சேர்ந்த நுகர்வோர்களுக்கு மட்டுமல்லாது, அருகில் உள்ள பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களும் இந்த சந்தர்பத்தினை பயன்படுத்திக் கொள்லலாம்.

அனைவரும் வந்து எங்கள் முயற்சிக்கு வலு சேர்த்து இது போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பதிவு செய்ய விரும்புவோர் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் இயங்கி வரும் மாநில நுகர்வோர் சேவை மையத்தில் உள்ள தொலைபேசியிலோ **(044-28592828)** மற்றும் **cai.india1.org** என்ற மின்னஞ்சல் முகவரியிலும், கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியஷன் ஆ.்.ப் இந்தியாவின் **044-24494573/74/75** என்ற தொலைபேசி எண்ணிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

# வாசகர்களுக்கான சிறப்பு பகுதி

தமிழ்நாடு அரசின் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் வெளியிடப்படும் “நுகர்வோர்” கவசம் தொடர்பான பணிகளை, கடந்த ஜூலை 2015 முதல் கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆப் இந்தியா செய்து வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்

உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் நுகர்வோர் தொடர்புடைய நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள், புகைப்படங்களுடன் எங்களுக்கு அனுப்பினால் அவை பிரசுரிக்கப்படும் என்று ஏற்கனவே நுகர்வோர் கவசம் இதழில் அறிக்கை வெளியிட்டு உள்ளோம்

ஆனால் பல மாவட்டங்களில் இருந்து இந்த விவரங்கள் பெறப்படவில்லை. நுகர்வோர் கருத்தரங்குகள் பயிற்சிகள், பேரணிகள், கூட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய உங்கள் விரிவான தகவல்களைப் பிரசுரிக்க ஆவலாக உள்ளோம்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் பொறுப்பில் உள்ள நுகர்வோர் மன்றங்கள், மாணவர் மன்றங்களைப் பற்றிய நிகழ்ச்சிகளை, புகைப்படங்களுடன், எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

# மாநில நுகர்வோர் சேவை மையம் பற்றி சில தகவல்கள்

சென்னையில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் மாநில் நுகர்வோர் உதவி மையம் டிசம்பர்’2015 முதல் கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆப் இந்தியா அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

பொது விநியோகம் மட்டும் அல்லாது அரசு மற்றும் தனியாரின் சேவைத் துறைகளிலும், பொருட்கள் வழங்கு துறைகளிலும் நுகர்வோருக்கு ஏற்படும் குறைகளைக் கேட்டறிந்து, தொடர்புடைய துறை / அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு குறைகள் நிவர்த்திக்கப்படுகின்றன.

**044/28592828** என்ற எண்ணில் இயங்கும் இச்சேவை வார வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை இயங்குகிறது ஒவ்வொரு மாதமும் சுமார் 1100க்கும் மேற்பட்ட குறைகள் கேட்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன.

உங்கள் பகுதியில் உள்ள நுகர்வோரை இந்த சேவையைப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்லி, உதவி மையம் சிறப்பாக பணியாற்ற உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# மாநில நுகர்வோர் சேவை மையம்

வெளிச்சந்தையில் வாங்கிய பொருட்களால் ஏமாற்றப்பட்டவரா?

ஒப்புக்கொண்டபடி சேவைகள் அளிக்காததால் பாதிக்கப்பட்டவரா நீங்கள்?

நுகர்வோர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியவில்லையா?

புகாருக்கும் ஆலோசனைக்கும் யாரை அணுகுவது என தெரியவில்லையா?

சிறந்த வழி அணுகுங்கள்- தீர்வு பெறுங்கள்

புகார்கள் அளிக்கவும், ஆலோசனைகள் பெறவும்
மாநில நுகர்வோர் சேவை மையம்: **044-28 59 28 28**
இ மெயிலில் புகார் பதிவு செய்ய: **consumer@nic.in**
கூடுதல் விபரங்களுக்கு **http://www.consumer.tn.gov.in**

# அத்தி பழமும் அதன் பயன்களும்

அத்திப்பழம் உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து, சுறுசுறுப்பைத் தந்து, கரும் பித்தத்தை வியர்வை மூலம் வெளியாக்கி, ஈரல், நுரையீரலிலுள்ள தடுப்புகளையும் நீக்குகிறது. அத்திப் பழத்தைத் தின்பதால் வெட்டையின் ஆணிவேர் அற்றுப்போகிறது. கால் விரல்களில் உண்டாகும் ஒருவித நோயையும் வராமல் தடுக்கிறது. அத்திப்பழம் தின்பதால் வாய் நாற்றம் நீங்குவதுடன் தலைமுடியும் நீளமாக வளர்கிறது.

- தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்,
- மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம்,
- நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.
- போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப்பழங்களை காடியில் (வினிகர்) ஒருவாரம் வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம்.
- தினசரி இரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால் உடல் கவர்ச்சிகரமாக வளரும். இதில் முழு அளவு ஊட்டச்சத்து இருக்கின்றது.

விஞ்ஞானிகள் அத்தி பழத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். இதில் புரோட்டீன், சர்க்கரைசத்து, கால்ஷீயம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து அதிக அளவில் இருப்பதாகவும், மற்ற பழங்களைவிட அத்திப் பழத்தில் இந்த சத்துக்கள் நாலு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வில் கூறியுள்ளனர். இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பழத்தைப் பொதுவாக உடல் பலவீனத்திலும், ஜுரங்களிலும் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். பதப்படுத்தப்பட்ட அத்திப்பழங்கள் யுனானி, நாட்டு மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன. இதை சீமை அத்திப் பழம் என்று கூறுவார்கள்.

சீமை அத்திப்பழம் வெண் குஷ்டத்தை குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைப் பவுடராக்கி பன்னீரில் கலந்து வெண் புள்ளிகள் மீது பூசலாம். இதை தயாரிக்க முடியாதவர்கள் யுனானி நாட்டு மருந்துக்கடைகளில் விற்கப்படும் சபூப் பாஸ் என்னும் மருந்தை வாங்கிப் பயன்படுத்தலாம்.



# எலுமிச்சையின் அற்புத மருத்துவக் குணங்கள்!

சாதாரணமாக அனைத்து இடங்களிலும் வளரக்கூடிய தாவர இனமான எலுமிச்சை பல அற்புதமான மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது பலருக்கும் தெரியாத விஷயம்.

தேள் கொட்டினால் அந்த இடத்தில் எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கி இரண்டு துண்டையும் தேய்க்க விஷம் இறங்கும்.

தலைவலிக்கு கடுங்காபியில் எலுமிச்சையின் சாற்றை கலந்து கொடுத்தால் உடனே குணமாகும்.

நீர் சுருக்கு, பித்த நோய், வெட்டை சூடு, மலச்சிக்கல் ஆகியவற்றுக்கு எலுமிச்சம் பழச்சாற்றுடன் சர்க்கரை அல்லது உப்பு சேர்த்து கலந்து குடித்து வந்தால் தகுந்த நிவாரணம் பெறலாம்.

மயக்கம், வாந்தி, வாய் குமட்டல், கண் நோய், காது வலி போன்றவற்றை குணப்படுத்தும் தன்மை எலுமிச்சம் பழத்திற்கு உண்டு.

எலுமிச்சை பழச்சாற்றை தலையில் தேய்த்து தலை முழுகி வர பித்தம், வெறி, உடல் உஷ்ணம் தணியும்.

அடிபட்டு ரத்தம் கட்டியிருந்தால் எலுமிச்சை சாற்றில் கரிய போளத்தை (கரிய போளம் என்பது கற்றாழையின் உலர்ந்த பால். இது நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்) சேர்த்து காய்ச்சி அடிபட்ட இடத்தில் பூசிவர ரத்தக்கட்டு கரையும்.

நகச்சுற்று ஏற்பட்டவுடன் எலுமிச்சை பழத்தில் துளையிட்டு விரலை அதனுள் சொருகி வைக்க வலி குறையும். எலுமிச்சம் பழச்சாற்றுடன் தேன் கலந்து குடிக்க வறட்டு இருமல் தீரும். இதனுடன் மோர் கலந்து குடிக்க ரத்த அழுத்தம் குறையும்.

சிலருக்கு பாதத்தில் எரிச்சல் ஏற்படும். அப்படிப்பட்டவர்கள் மருதாணியை அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து பாதத்தில் தடவி வந்தால் எரிச்சல் குணமாகும்.

சிறிதளவு எலுமிச்சை இலைகளை அரைத்து சாறு பிழிந்து, அதனுடன் சிறிது உப்பு சேர்த்து நீரில் கலந்து குடித்தால் வாந்தி நிற்கும்.

எலுமிச்சை பழத்தின் விதைகளை நீரில் போட்டு காய்ச்சி அதில் இருந்து எழும் ஆவியை முகத்தில் படும்படி பிடிக்க நீர்பினிசம் தீரும்.

சீரகத்தை எலுமிச்சை பழச்சாற்றில் 2 நாள் ஊற வைத்து பின் அந்த சாற்றுடன் வெயிலில் காய வைக்கவும். நன்றாக காய்ந்ததும் மீண்டும் எலுமிச்சம் பழச்சாற்றில் ஓர் இரவு ஊற வைத்து மீண்டும் வெயிலில் காய வைக்கவும். நன்றாக உலர்ந்தபின் அதை எடுத்து பொடியாக்கி ஒரு ஸ்பூன் அளவு தேன் அல்லது தண்ணீரில் கலந்து மூன்று வேளை சாப்பிட்டுவர அஜீரணம், பித்தம் தணியும். ரத்த அழுத்தம் சீராகும்.

# நோய் எதிர்ப்பு சக்தி தரும் தக்காளி

புற்றுநோய் வராமல் தடுக்க கூடியதும், நோய் எதிர்ப்பு சக்தி உடையதும், குடல் புண்களை ஆற்ற கூடியதும், சருமத்தை பாதுகாக்கும் தன்மை கொண்டதும், உடல் எடையை குறைக்க கூடியதுமான தக்காளியின் மருத்துவ குணம் மிக சிறந்தது.

தக்காளியின் பழம், காய், இலை, விதையில் மருத்துவ குணங்கள் உள்ளன. வைட்டமின் சத்துக்களை அதிகம் கொண்டது. தக்காளி முக்கியமான உணவாக பயன்படுகிறது. இதன் இலைகள் மேல்பூச்சு மருந்தாக பயன்படுகிறது.

தக்காளியை பயன்படுத்தி ஆஸ்துமாவுக்கான தேனீர் தயாரிக்கலாம். தக்காளியை நீர்விடாமல் தோலுடன் அரைத்து ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் சிறிது சுக்கு, மிளகுப்பொடி சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி குடிப்பதால் ஆஸ்துமா பிரச்னை சரியாகும். சளி, இருமல் இருக்கும்போது எடுத்துக்கொண்டால் அவைகள் குறைய ஆரம்பிக்கும். குழந்தைகளுக்கு கொடுக்கும்போது சிறிது தேன் சேர்த்து கொடுக்கலாம்.

சுவாச கோளாறுகளை போக்கும் தன்மை உடைய தக்காளி, பல்வேறு நோய்களுக்கு மருந்தாகிறது. புற்றுநோய் வராமல் தடுக்கும். நுரையீரல் புற்றுக்கு மருந்தாகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்த கூடியது. உள் உறுப்புகளை பலப்படுத்தும்.

தக்காளியை பயன்படுத்தி குடலில் ஏற்படும் தொற்று, புண்களை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தக்காளியை வட்டமாக வெட்டி, புளிப்பில்லாத தயிரில் நனைத்து சாப்பிட்டு வந்தால் குடல் புண்கள் ஆறும். குடலில் ஏற்படும் புற்றுநோயை தடுக்கிறது. மார்பக புற்றுநோயை தடுக்கும் மருந்தாகிறது.

தக்காளியை பயன்படுத்தி முகப்பொலிவை அதிகப்படுத்தும் மேல்பூச்சு தயாரிக்கலாம். வருகின்ற மாதங்களில் வெயில் அதிகளவில் இருக்கும். புற ஊதா கதிர்கள் தோலில் வேர்குரு போன்ற துன்பங்களை தரும். வெயில் படுவதால் தோலில் கருமை நிறம் ஏற்படும்.

இந்நிலையில், முகம், கை, கால்களில் தக்காளி சாறு பூசவும். சிறிது நேரம் கழித்து கழுவினால் கருமை நிறம் மாறும். சுருக்கங்கள் மறைந்து போகும். தக்காளி சாறு தினமும் ஒரு டம்ளர் குடிப்பதால் உள் உறுப்புகள் பலமாகும். உடலுக்கு புத்துணர்வு ஏற்படும்.

தக்காளியை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் தடவவும். இதில், வெட்டி வைத்த தக்காளி துண்டுகளை வைத்து லேசாக வதக்கிய பின் மிளகுப்பொடி சேர்க்கவும். சுவைக்காக உப்பு சேர்க்கலாம். காலை உணவை குறைத்துக் கொண்டு இதை சாப்பிட்டுவர உடல் எடை குறையும்.

உணவாக பயன்படுத்தி வரும் தக்காளி, புற்றுநோயை தடுக்கிறது. அமிலச்சத்தை குறைக்க கூடியது. பொட்டாசியம் அதிகளவில் இருப்பதால் இதய ஓட்டம் சீராக இருக்கும். மாரடைப்பு தவிர்க்கப்படுகிறது.

# மருத்துவக் குணம் நிறைந்த பேரிக்காய்

பேரிக்காய் மலைப் பகுதிகளில் விளையக்கூடியது. வெளித் தோற்றத்திற்கு பச்சை காய் போல் தோன்றும். ஆனால் இது சுவைமிகுந்த பழங்களில் ஒன்று. பேரிக்காய் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைக்கும் பழமாகும். பேரிக்காயை சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கிடைக்கும். இதில் ஏ, பி, பி2, என வைட்டமின்கள் நிறைந்துள்ளன. இரும்பு சத்து, சுண்ணாம்புச் சத்து, கணிசமான அளவு உள்ளது.

வெளித் தோற்றத்திற்கு பச்சை காய் போல் தோன்றும். ஆனால் இது பழம்தான். சில காய்கள் பழுப்பு நிறத்தில் காணப்படும். இவை மலைப் பகுதிகளில் விளையக்கூடியது.

பேரிக்காய் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைக்கும் பழமாகும். இக்காலங்களில் இதை வாங்கி சாப்பிடுபவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுவார்கள்.

சுவையான இந்தப் பழத்தில் ஏ, பி, பி2, என வைட்டமின்கள் நிறைந்துள்ளன. இரும்பு சத்து, சுண்ணாம்புச் சத்து, கணிசமான அளவு உள்ளது.

இதயப் படபடப்பு நீங்க:

இதயப் படபடப்பு உள்ளவர்கள் தினமும் இருவேளை ஒரு பேரிக்காய் வீதம் சாப்பிட்டு வந்தால் இதயப் படபடப்பு நீங்கும்.

வாய்ப்புண் குணமாக:

வயிற்றில் புண் இருந்தால்தான் வாயில் புண் ஏற்படும். இந்த வாய்ப் புண்ணையும், வயிற்றுப் புண்ணையும் ஆற்றும் சக்தி பேரிக்காய்க்கு உண்டு. தினமும் ஒரு பேரிக்காய் வீதம் சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண், வயிற்றுப்புண் விரைவில் குணமாகும்.

**வயிற்றுப் போக்கு:**

உண்ணும் உணவின் அலர்ஜி காரணமாக சிலருக்கு வயிற்றுப் போக்கு உண்டாகும். மேலும் சிலருக்கு பாக்டீரியாக்களால் வயிற்றுப் போக்கு உண்டாகும். தினமும் பேரிக்காய் ஒன்று சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் போக்கு நீங்கும்.

சிறுநீரக கல்லடைப்பு நீங்க:

இரத்தத்தில் இருந்து பிரிந்த தாது உப்புக்கள் சிறுநீரகத்தில் படிந்து அவை கல்லாக மாறுகின்றன. இவற்றைப் உடைத்து வெளியேற்ற தினமும் இரண்டு பேரிக்காய் சாப்பிட்டு வருவது நல்லது.

- உடல் சூட்டைத் தணிக்கும்.
- கண்கள் ஒளிபெறும்.
- நரம்புகள் புத்துணர்வடையும்.
- தோலில் ஏற்பட்ட பாதிப்புகளை குணப்படுத்தும்.
- குடல், இரைப்பை இவைகளுக்கு நல்ல பலம் கிடைக்கும். உடலை வலுவாக்கும்.

பேரிக்காய் கிடைக்கும் காலங்களில் உண்டு அதன் மருத்துவப் பயன்களை முழுமையாகப் பெறுவோம்.



வங்கிகளில் வாடிக்கையாளர்களின் கணக்கில் குறைந்தப்பட்ச இருப்பு தொகை இல்லையெனில் அவர்களுக்கு அபராத தொகையாக ஒரு குறிப்பிட்ட தொகையினை வங்கிகள் விதித்து வந்தது. ஆனால் ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிக்கை ஒன்றில் வாடிக்கையாளரின் கணக்கில் குறைந்தப்பட்ச இருப்புத் தொகை இல்லையெனில் வங்கிகள் அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி தகவலை தெரிவிக்க வேண்டும் அதுவே போதுமானதாக இருக்கும் என தெரிவித்துள்ளது.

# வங்கிச் சேவையில் குறைபாடு – இழப்பீடு தர கோவை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு

வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பு வைக்க வேண்டுமெனக் கூறி வாடிக்கையாளர் கணக்கில் இருந்து பிடித்தம் செய்த வங்கி வாடிக்கையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என, கோவை மாவட்ட நுகர்வோர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோவை சாய்பாபா காலனியைச் சேர்ந்தவர் ஜெயராமன். இவர் கடந்த 2004 ல் நகை அடமானக் கடன் பெற அதே பகுதி SNR சாலையில் செயல்படும் தனியார் வங்கிக்குச் சென்றுள்ளார். நகைக் கடன் பெற வங்கிக் கணக்குத் துவங்க வேண்டும் என வங்கி நிர்வாகம் அறிவுறுத்தியதுடன், 500 ரூபாயில் சேமிப்புக் கணக்கு ஒன்றையும் ஜெயராமன் பெயரில் துவக்கித் தந்தது.

ஐந்து மாதங்கள் கழித்து, 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையைத் தன் கணக்கில் செலுத்தினார். ஆனால் இருப்பில் 500 ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டிருந்தது. “கணக்கில் பணம் இல்லை” 40 ஆயிரம் மட்டும் உள்ளது. குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாததால், பணம் பிடித்தம் செய்யப்பட்டிருப்பதாக வங்கி சார்பில் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து ஜெயராமன் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் விளக்கம் கோரி கடிதம் அனுப்பினார். அதற்குப் பிந்தைய காலத்திலும் வங்கி சார்பில் குறிப்பிட்ட தொகை பிடித்தம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குறை கேட்புக் கூட்டத்தில் ஜெயராமன் முறையிட்டார். வங்கி சார்பில் அனுப்பப்பட்ட விளக்கத்தில் குறைந்தபட்ச இருப்பாக 1000 ரூபாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இருப்புக் கட்டணம் பிடித்தம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இவ்விதிமுறை குறித்து வங்கி நிர்வாகம் முன்னரே தெரிவிக்கவில்லை என்றும், மேலும் சில காரணங்களை உள்ளடக்கியும், ஜெயராமன் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் முறையிட்டார். மன உளைச்சலுக்கு இழப்பீடாக ஐந்து லட்சம் ரூபாய் கோரி இருந்தார்.

மனுவை விசாரித்த நுகர்வோர் குறைதீர்மன்றம் “நகைக் கடனுக்காக வங்கிக் கணக்கு துவக்கவேண்டும் என்ற விதி இல்லாத போதும் வற்புறுத்தியது. குறைந்தபட்ச இருப்புத் தொகை பற்றியும், தவறும் பட்சத்தில் கட்டணம் பற்றியும் ரிசர்வ் வங்கி விதிமுறைகள் எதுவும் கூறாத நிலையில், வாடிக்கையாளர் கணக்கில் இருந்து பிடித்தம் செய்தது சேவைக் குறைப்பாடு” எனத் தீர்ப்பளித்தது.இதையடுத்து, வாடிக்கையாளரின் மன உளைச்சலுக்கு ஈடாக 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடும்,வழக்குச் செலவுக்காக 1000/- ரூபாயும் வாடிக்கையாளருக்கு இரண்டு மாதத்திற்குள் வழங்க வேண்டும் என மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் வங்கிக்கு உத்தரவிட்டது.



# கல்வி ஆலோசனை மைய சேவை குறைபாடு: மும்பை மாணவருக்கு ரூ.1 லட்சம் நஷ்டஈடு

கல்வி ஆலோசனை மையத்தின் சேவை குறைபாடு காரணமாக, மும்பை மாணவருக்கு ரூ.1 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று தானே கோர்ட்டு உத்தரவிட்டது.

### சேவை குறைபாடு

மும்பை செம்பூரை சேர்ந்த மாணவர் ரிஷி ராகேஷ் என்பவர், தானே நுகர்வோர் தீர்ப்பாயத்தில் ஒரு புகார் மனு தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

நான் ஜெர்மனி நாட்டில் உள்ள கோபூர்க் பல்கலைக்கழகத்தில் ஓட்டல் மேனேஜ்மெண்ட் படிக்க விரும்பினேன். இது தொடர்பாக, தானேயில் இயங்கி வரும் கல்வி ஆலோசனை மையத்தை தொடர்பு கொண்டு பேசினேன். அவர்கள் எனக்கு உதவுவதாக

உறுதியளித்ததை தொடர்ந்து ரூ.30 ஆயிரம் முன்பணம் செலுத்தினேன்.

அதன்பின், எனக்கு ஓட்டல் மேனேஜ்மெண்ட் பிரிவு கிடைக்கவில்லை என்றும், நிதி மேலாண்மை (பைனான்ஷியல் மேனேஜ்மெண்ட்) பாடப்பிரிவை எடுத்து படிக்குமாறு கூறினார்கள். இதனால் நான் ஏமாற்றம் அடைந்தேன்.

இவ்வாறு மனுவில் தெரிவித்து இருந்தார்.

**இழப்பீடு**

இந்த மனு நீதிபதி உமேஷ் ஜவாலிகர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சம்பந்தப்பட்ட கல்வி ஆலோசனை மையத்தின் திறமையற்ற செயல்பாட்டை நீதிபதி உணர்ந்தார். ஆகையால், சேவை குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு ரூ.1 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும், அவரிடம் பெற்ற முன்பணம் ரூ.30 ஆயிரத்தை ஒரு மாதத்திற்குள் திருப்பி செலுத்த வேண்டும் என்றும் கல்வி ஆலோசனை மையத்துக்கு நீதிபதி உத்தரவிட்டார்.



# சாப்ட்வேர் தயாரிப்பில் சேவைக் குறைபாடு இழப்பீட்டுடன் ரூ.2.70 லட்சம் வழங்க உத்தரவு!!!

முழுமை பெறாத சாப்ட்வேர் தயாரித்துக் கொடுத்து, சேவையில் குறைபாடு செய்த கோவை ஆர்.பி. சாப்ட்வேர் நிறுவனம், பாதிக்கப்பட்ட ஏற்றுமதி நிறுவனத்திற்கு ரூ.2.70 லட்சத்துடன் ரூ.21 ஆயிரம் இழப்பீட்டையும் வழங்க கோவை நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருப்பூர், வேலம்பாளையத்தில் பட்டேல் ஹாம்ராக் (பி) லிமிட்டெட் எக்ஸ்போர்ட் நிறுவனம் செயல்படுகிறது. இந்நிறுவனத்திற்காக ஜி.எஸ்.எம் எனும் சாப்ட்வேர் உருவாக்க நிர்வாகம் தீர்மானித்தது. கோவை சிவானந்தா காலனியில் உள்ள ஆர்.பி. சாப்ட்வேர் நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, சாப்ட்வேர் தயாரிக்கும் ஒட்டு மொத்த செலவாக ரூ.2.70 லட்சத்தைத் தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, முன் பணமாக 2005, ஏப்.28ல் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அடுத்து சில மாதங்களில் மேலும் 50 ஆயிரம் ரூபாய்க்குக் காசோலை தரப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, ஐந்து தவணைகளில் ரூ.2.20 லட்சம் வழங்கப்பட்டது. சாப்ட்வேர் தயாரிப்பில் தாமதம் ஏற்பட்டதால், கூடுதல் தொகை தரப்பட்டது.

ஓராண்டு காலத்திற்குள் தொடர்ந்து சாப்ட்வேரில் பிரச்சினை ஏற்பட்டு, அடிக்கடி பழுதானது.அதிருப்தி அடைந்த ஏற்றுமதி நிறுவனம், முழுமை அடையாத, அடிக்கடி பிரச்சனைக்கு உள்ளாகும் சாப்ட்வேர் குறித்து சம்பந்தப்பட்ட தயாரிப்பு நிறுவனத்திடம் சேவைக் குறைபாட்டைத் தெரிவித்தது.

தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பட்டேல் ஹாம்ராக் நிறுவனம், கோவை மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் ஆர்.பி. சாப்ட்வேர் நிறுவனத்தின் சேவைக் குறைபாடு குறித்து வழக்குத் தொடர்ந்தது.

வழக்கை நீதிபதி ஸ்ரீராமுலு, உறுப்பினர் மாதவி, ரத்தினம் ஆகியோர் விசாரித்துத் தீர்ப்பளித்தனர்.

பாதிக்கப்பட்ட நிறுவனத்துக்கு ரூ.2.70 லட்சத்தை 12 சதவீத வட்டியுடன் சேர்த்து வழங்குவதுடன், மன உளைச்சல் ஏற்படுத்தியதற்காக 20 ஆயிரம் ரூபாய் மற்றும் செலவுத் தொகை ஆயிரம் ரூபாய் ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் வழங்க ஆர்.பி.சாப்ட்வேர் நிறுவனத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டடது.

# வாசகர் கடிதங்கள்



அன்புள்ள நுகர்வோர் கவசம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். நுகர்வோர் கவசத்தில் நான் விரும்பும் பகுதியில் வந்த நீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தும் அருமை. ஆன்லைன் வர்த்தகத்தில் நாம் வாங்கும் பொருட்கள் அனைத்தும் தரம் குறைவு என்று தெரிந்து கொண்டேன். புவி வெப்பமடைதல் பற்றிய கட்டுரை படித்தேன். பூமி எதிர்நோக்க இருக்கும் தட்ப வெட்ப புவியியல் மாற்றங்கள், விளைவுகள், தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய தகவல் அறிந்தேன். ஜிகா வைரஸ் கொசு மூலம் பரவுகிறது என்றும், நிலவேம்பு கஷாயம் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம் என்று தெரிந்து கொண்டேன். வாடகை வீட்டு குடித்தனச் சட்டத் தகவலை தெரிந்து கொண்டேன். ஏசியை விட இயற்கை காற்று உடலுக்கு நலம் தரும் என்றும் வீடுகளில் எவர்சில்வர் தட்டுகள், சுப நிகழ்ச்சிகள், பொது இடங்களில் பயன்படுத்தும், பிளாஸ்டிக் தட்டுக்கள், டம்ளர், மினரல் வாட்டர் என்ற தரம் இல்லாத குடிநீர் கேன்கள் இவை அனைத்தையும் தவிர்த்து வாழை இலையை பயன்படுத்துவோம். வெயிலுக்கு கடைகளில் விற்பனை செய்யும் இரசாயனம் கலந்த பிளாஸ்டிக் பாட்டில் குளிர்பானத்தை அருந்தாமல் நம் வீடுகளில் உடலைக் குளுமையாக்கும் பழங்களை வாங்கி சாறாக்கிப் பருகுவது நல்லது. குளிர்ச்சி தரும் லவங்கப்பட்டையை பயன்படுத்துவோம். மேலும் பல தகவல்களை எங்களுக்கு வழங்கவும், நுகர்வோர் கவசம் சிறப்பாக செயல்படவும், வாசகர் கடிதங்கள் மூலமாக எனது அன்பையும் ஆதரவினையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கதிர்வேல்**, வெள்ளகோயில்

இந்தியாவை மிரட்டும் மின்னணு கழிவுகள் சிறப்புக் கட்டுரை மக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்கி நல்ல செய்தியினை கொடுத்துள்ளீர்கள். மேலும் தமிழர்களின் பாரம்பரிய விளையட்டுக்கள், பெட்ரோல் போட போகும் போது கவனிக்க வேண்டிய முறைகள், சொத்துக்களுக்கு விவசாய நிலங்களுக்கு பாதுகாப்பு மற்றும் பட்டா வாங்குவது மற்றும் மாற்றுவது பற்றிய பயனுள்ள செய்திகளை வெளியிட்டமைக்கு விவசாயிகள் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். கவசத்தின் பணிகள் தொடர வாழ்த்துக்கள்.

**பா.மா. வெங்கடாசலபதி**, ஈரோடு

நுகர்வோர் கவசத்தில் வெளியாகும் தகவல்கள் மிகுந்த பயனுள்ளதாக அமைந்து வருகிறது. அனைவருக்கும் நல்ல பயனுள்ள பல தகவல்களை வழங்கி வரும் நுகர்வோர் கவசத்திற்கு எந்தன் மன்மார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.நாம் அன்றாடம் உபயோக்கிக்கும் பல மின்னணு பொருட்கள் பல எவ்வாறு வீணாகிப் போகின்றன என்பதைப் பற்றியும், அதனை சரி செய்யும் முறைகளைப் பற்றியும் தெளிவாக கூறியிருந்தமைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு மேலும் பல தகவல்களை வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**ஹரிகிருஷ்ணன்**, சென்னை

அன்பார்ந்த நுகர்வோர் கவசம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். பார்வையில் கண்ட புத்தகமாக நுகர்வோர் கவசம் புத்தகத்தினை படித்தேன். நுகர்வோர் கவசம் பகுதியில் வரும் அனைத்து கட்டுரைகளுமே மிக அருமையாக இருந்தது.

ஒவ்வொரு கட்டுரையும் மிகவும் தெளிவாகவும், தாக்கத்தினை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்து.

நுகர்வோர் தீர்ப்புகள் பகுதியினைப் படித்த பின்னர் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து விட்டது எனவே கூறலாம். ஒரு புத்தகத்தின் உண்மையான நோக்கமே படிப்பவர்களிடையே விழிப்புணர்வையும் மாற்றத்தையும் ஏற்படுத்துவதே ஆகும். அந்த சிறப்பான பணியினை மிக சிறப்பாக செய்து வரும் ஆசிரியருக்கும், ஆசிரியர் குழுவிற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தொடரட்டும் உங்களது சிறப்பான பணி.

**கலைவாணி**, மதுரை

# வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ | தீ | ம | ழி | க் | மி | ப் | க | கோ | கி |
| யு | கெ | ன | வெ | செ | ஸ் | டி | ரெ | க | ரே |
| அ | டோ | வ் | ன் | யோ | மெ | யு | க் | கி | கீ |
| கு | ழ் | நா | கே | பீ | க் | ந் | கே | ஜி | ப் |
| ழீ | பூ | லொ | டா | வீ | அ | ன் | ஹ | ரி | ட் |
| ன் | ர | மு | பி | லை | ண | ஷ் | த | ரு | கி |
| க | நா | லை | பூ | வா | ர் | வே | ந் | வே | து |
| ஜா | ரோ | எ | ச | று | ர | ம் | பு | ன் | தி |
| ரி | ஜூ | ண | சீ | ப | ல | மி | ட் | னா | சு |
| சை | லி | க | பே | தி | லெ | ரீ | வ் | லொ | ட் |

1. உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?(4)
2. வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள்?(4)
3. ஜப்பானின் தலைநகர்?(4)
4. பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?(3)
5. திரை அரங்குகளே இல்லாத நாடு?(4)
6. உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம்?(3)
7. நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு ?(3)
8. தன்னுடைய எடையைப் போல் இருபது மடங்கு எடையைத் தூக்கும் ஆற்றல் மிக்க உயிரினம்?(4)
9. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?(2)
10. உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப்படுவது?(4)

# பரிசு பெற்றவர்களின் விவரங்கள்

**கோமதிநாயகம்**, மதுரை

**மாரியப்பன்**, காரைக்குடி

**ஹரிகிருஷ்ணன்**, சென்னை

**கலைவாணி**, மதுரை

**தினேஷ்**, கடலூர்

**கனிமொழி**, தஞ்சாவூர்

**சுரேந்தர்**, சென்னை

**மாலதி**, மதுரை

**கவிதா**, புதுக்கோட்டை

**பவரோஷினி**, சென்னை

# சென்ற இதழில் வெளியான கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. அன்னை தெரசா
2. சவூதி அரேபியா,
3. இந்தியா
4. ஆலமரம்
5. புளூட்டோ
6. இங்கிலாந்து
7. ரூபாய்
8. குதிரை
9. உத்திரபிரதேசம்
10. பாரத ரத்னா

குறிப்பு: இப் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை 08-07-2016 க்குள் **"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" குறுக்கெழுத்துப் போட்டி, 3/242, ராஜேந்திரா கார்டன், வெட்டுவாங்கேணி, சென்னை – 600115** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சரியான விடை அனுப்பும் நுகர்வோர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 பேருக்கு பரிசுகள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

அனுப்புபவர்: பெயர்.......................................................................

முகவரி:.......................................................................

.......................................................................

அஞ்சல் குறியீடு.......................................................................

தொலைதொடர்பு எண்.......................................................................

# தமிழ்நாடு நுகர்வோர் கவசம் சந்தாதாரர் படிவம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| ........................................<br>........................................<br>........................................<br>........................................ | ஆணையாளர்,<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>எழிலகம், 4வது தளம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை - 600 005 |

அய்யா,

தமிழ்நாடு நுகர்வோர் கவசம் எனும் நுகர்வோர் விழிப்புணர்வு மாத இதழை, எனது முகவரிக்கு அனுப்பி வைக்கக்கேட்டு அதற்கான சந்தா தொகையை Tamilnadu Nugarvor Kavasam எனும் பெயரில் அனுப்பியுள்ளேன்.

## சந்தாதாரர் மற்றும் சந்தா தொகை விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சந்தாதாரர் பெயர் | | | |
| 2. | சந்தாதாரர் முகவரி | | | |
| 3. | தொலைபேசி / கைபேசி எண் | | | |
| 4. | மின்னஞ்சல் முகவரி | | | |
| 5. | செலுத்தப்படும் சந்தா தொகை (✓செய்யவும்) | ஓராண்டு | மூன்றாண்டு | ஐந்தாண்டு |
| | | ரூ.100/- | ரூ.300/- | ரூ.500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | Tamilnadu Nugarvor Kavasam எனும் பெயரில் சந்தா தொகை செலுத்திய விவரம் | மணியார்டர் E-Money order | காசோலை Cheque | வரைவோலை Demand Draft |
| | | ரசீது எண் | Bank | Bank |
| | | அனுப்பிய நாள் | No. | No |
| | | | Date | Date |

சந்தாதாரர் கையொப்பம்

---

## அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

திரு.................................................................................... என்பவர் செலுத்திய சந்தா தொகை ரூ............................/- (ரூபாய்..................................................................மட்டும்) பெற்றுக்கொள்ளப்பட்டது. மனுதாரரின் சந்தாதாரர் எண்................................ ஆகும். 2016...................... மாதம் முதல்..................... மாதம் வரை இவருக்கு தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ் தபாலில் அனுப்பிவைக்கப்படும். மாத இதழ் கிடைக்கவில்லை என்றால் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலக நு.வி. பிரிவு கண்காணிப்பாளரை தொலைபேசி எண்: 044 - 28583322, 28583222, 28583422, 28583272 தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

இடம்: சென்னை - 600 005.

நாள்:..........................................

ஆணையாளருக்காக
உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை,

DATE OF PUBLICATION EVERY MONTH 18TH
REGISTERED UNDER RNI NO. TNTAM/2008/24148
R. DIS. NO.1361/2014
POSTAL CONCESSION REGISTERED UNDER TN/CH © / 415/16-18
WPP.LIC.NO.TN/PMG (CCR) /WPP -231/2016 -18
Licensed to post without prepayment



23.5.2016 அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவை பதவியேற்பு விழாவில், மேதகு தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்கள், ஆறாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்கள்.

## வெளியிடுவோர்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி - 044 - 28583222, மின்னஞ்சல் ccs@tn.gov.in